346

346
4.55

திரட்டு

மன்மத ஞூ
ஆனி — ஆடி

ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன்
(வாழ்க்கைச் சித்திரம்)

அதிசய ஆணைக்கட்டு

கம்பன் கண்ட சர்வோதயம்

தொல்லை தரும் திருவள்ளுவர்!

அழகு படுத்தும் பாடு

லாந்தர் ஏந்திய மாது

இன்னும் தொடர் நாவல்,
நாடகம், சிறு கதைகள், பல
விசேஷக் கட்டுரைகள்
நிறைந்தது.

MADRAS

6

Vol. 2. No. 7. June-July 1955

96 பக்கங்கள் — 6 அணா

72
N211, N5354
N55.2-7.
198760

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ்
ரெடிமேட்
ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

திரட்டு

Vol. 2. பொருளடக்கம் No. 7.

நேருவின் பிரதிபிம்பம்	...	5
பதிமூன்றே! பயப்படோம்	...	8
புண்ணியம் தேடு—புவியைச்சுற்று	...	9
மூளையும் மனிதரும்	...	12
ஹிந்து விவாக மசோதா	...	13
விவசாய விநோதங்கள்	...	15
அழகு படுத்தும் பாடு	...	17
மழைக்கென்றே வாழும் மண்டுகம்	...	21
வேலைதேடும் படலம்	...	22
சுதந்திரம் ஏமாற்றிய சேனபதி	...	25
உடல் ஆஜர், மூளை ராஜா	...	26
நோய்க்கிடங்கொடேல்	...	27
ராஜரிஷி	...	29
மணிவிளக்கு ஏற்றுவோம்!	...	32
லாந்தர் ஏந்திய மாது	...	33
பயங்கர விருந்தாளி	...	36
ஏமாற்றம்	...	37
ஆண்டவனே காட்டிக்கொடுத்தார்!	...	39
அசலும் நகலும்!	...	40
ஜகத்வீர ராஜகுமார எட்டப்ப மகாராஜா	...	41
தொல்லைதரும் திருவள்ளுவர்!	...	43
ஆரோக்கியம் தரும் அரிய கிழங்கு	...	46
பெண் மொழிகள்	...	48
சம்பாஷணை—ஒரு கலை	...	49
அதிசய அணைக்கட்டு	...	50
பாக்ரா அணைக்கட்டு—படங்கள்	...	51-52
கண்ணனை அழைக்காத காரணம்	...	54

நாச குண்டுகள்	...	55
பெற்ற பாசம்	...	60
எட்டாயிரத்திற்கும் கிட்டாது!	...	66
பழமையில் மோகம்	...	67
ஈசுவர தரிசனம்	...	70
மேவாரின் வீழ்ச்சி	...	73
கம்பன் கண்ட சர்வோதயம்	...	78
உயிர்க்கனல்	...	81
வாழ்க்கைக்கு வழிகாட்டி	...	85
அந்தக்காலமும் வருமா?	...	89
புதுவைக்கு தனி அந்தஸ்து வேண்டும்	...	92

BOUQUET

No. 19-A, Sathaman galam,
Via Tallakulam,
Madurai
22—6—1955.

To

The Editor, 'Thirattu', *Madras*.

Sir,

I have been reading your Tamil monthly 'Thirattu' since a few months. I am really very glad to inform you that it has fulfilled a long felt desire of me to have a monthly in our Tamil like that of the English Digest. I believe that this useful monthly is decidedly helping a lot to raise the standard of our mother tongue. We get useful and really interesting information from this Tamil Digest instead of mere stereotyped old world stories and silly trash as in the majority of the present day Tamil publications. I am sure most English educated people will like this very much and take to regular reading of this.

Yours sincerely,
(Sd.) K. S. SINGARI AMMAL

198760
சென்னை 600 008

உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்

("எஸ்–100" ஸால்வெண்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32

Branches : **Delhi – Bombay – Madras**

மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை – 1.

ஸ்ரீ அம்பிகா எம்போரியம்

தாசர்புரம், திருநீண்டயூர் போஸ்டு
திண்ணனூர் ரயில்வே ஸ்டேஷன்.





உத்தரவாதமான பி. அண்டு சி. மில்
ரெடிமேட் ஆடைகளுக்கும் நூதன பைகளுக்கும்
சிறந்த இடம் :

உரிமையாளர்
எம். கே. ரங்கனாதன்



ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன்

Photo] [PIB

'THIRATTU" Tamil Monthly Digest.

திரட்டு

சிறந்த மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

ஜூன் - ஜூலை ○ 1955

நேருவின் பிரதிபிம்பம்

★

தலையில் தென்படும் சில நரைத்த ரோமங்களைத் தவிர முப்பது வருஷங்களுக்கு முன்பு சோஷலிஸ்டு புரட்சியில் பிரபலஸ்தராயிருந்த கிருஷ்ண மேனனுக்கும் இன்று இந்தியாவின் மிகப் பிரபல ராஜதந்திரியாக விளங்கும் ஸ்ரீ கிருஷ்ண மேனனுக்கும் வித்தியாசமொன்றுமில்லை.

இவரது தோற்றம் கண்ணைக் கவரும் தன்மையதல்ல ஆனால் நெஞ்சை அஞ்ச வைக்கும் ரகத்தைச் சேர்ந்தது. இவரது முகத்தில் அமைதியே காணாது. இவரது கண்களும், கருட மூக்கும், கைகளும் இவரது வாயைப் போன்றே பேசும் சக்தி வாய்ந்தவை.

இவரது தோற்றத்தின் ஆகர்ஷண சக்தி சற்று குறைவது இவர் நடக்கும்போதுதான. கால்களில் சிறிதுகோளாறு காரணமாக இவர் நடக்கும்போது கூன் நடை போன்றிருக்கும்.

அழகும் தூய்மையும் வாய்ந்த ஆடைகளையேதான் ஸ்ரீ மேனன் எப்போதும் தரிப்பார்.

ராஜ போகத்தில் இன்று வாழும் மேனனை நேற்று வரையிலும், உடையைப்பற்றி ஒருவித அக்கறையுங் கொள்ளாமல் சாதாரண வீடுகளில் வசித்திருந்த அரசியல் தொண்டரென்று அவரை அறிந்தவர்கள் அதிசயிக்கலாம். இதன் உண்மையென்னவென்றால், இயற்கையாகவே அழகிலும் தூய்மையிலும் பற்றுக்கொண்டவர் மேனன்.

இவர் வாழ்க்கையில் இவை இடம் பெற்றது 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தியா சுதந்திரமடைந்ததால் இவர்

லண்டனில் இந்திய சர்க்கார் தூதராக நியமிக்கப்பட்ட பின்னர்தான். இந்திய தூதராலயத்திற்குத் தேவையான கண்ணுடி, பீங்கான் சாமான்கள், விரிப்புகள், துணித்திரைகள் முதலியவற்றை தன் கையாலேயே தேர்ந்தெடுத்து தன் கற்பனைக்கேற்றவாறு இந்திய தூதராலயத்தை அலங்காரஞ் செய்தார்.

இந்திய தூதராலயத்து உத்தியோகஸ்தர்கள் உபயோகத்துக்கு வேண்டிய மோட்டார் வண்டிகளையும் வாங்கினுர். இந்திய சர்க்கார் தூதரின் பிரத்தியேக உபயோகத்திற்காக ஒரு 'ரோல்ஸ் ராயஸ்' காரும் ஒரு மாளிகையும் ஏற்பாடு செய்து கொண்டார் ஸ்ரீ மேனன். இவ்வளவும் செய்துவிட்டு மேனன் தன் உத்தியோக காலம் முழுவதும் இந்திய தூதராலயத்தில் ஒரே அறையில் வசித்தார். அடிக்கடி பஸ்ஸில் பிரயாணஞ் செய்து வந்தார். இந்திய சுதந்திரத்திற்குத் தீவிரமாக மேனன் பாடுபட்டு வந்தபோதெல்லாம் லண்டனில் ஒரு பகுதிக்கு நகரசபை அங்கத்தினராக இருந்தார். அந்தப் பகுதியில் இவர் இணையற்ற சேவை செய்துள்ளார். 1934-ஆண்டிலிருந்து 1947-ஆண்டு வரையிலும் இந்தப் பகுதியில் கல்வி வசதிகளையும், பொதுஜன வாசகசாலைகளுக்காகவும், கலைக்கழகங்களுக்காகவும் தீவிரமாகப் பாடுபட்டுள்ளார். இந்தத்தொண்டுகளுக்கெல்லாம் நன்றிச் சின்னமாகச் சமீபத்தில் கிருஷ்ண மேனனுக்கு இந்தப் பகுதி நகர சபையார் 'தங்கள் நகரத்துச் சுதந்திரம்' என்ற விருதையளித்துக் கௌரவித்தார்கள்.

லண்டன் நகரத்தில் ஒரு பகுதியின் உண்மைத் தொண்டராயிருந்த மேனன் மாதமொருமுறை டில்லி, நியூயார்க், மாஸ்கோ, முதலிய இடங்களுக்கு விமானத்தில் பறந்து செல்வது பற்றி இப்பகுதி வாசிகள் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள். அநேக ஆண்டுகளாக இங்கிலாந்திலேயே வசித்துள்ள ஸ்ரீ கிருஷ்ணமேனனுக்குச் சற்றும் ஆங்கிலேயர் வாழ்க்கை முறைகளில் பற்று ஏற்படவில்லை. புகை பிடிக்காதவரும், மது அருந்ாதவரும், சைவ உணவிலேயே பற்றுக் கொண்டவருமான மேனனுக்கு தென்னிந்தியாவின் காரமான உணவு வகைகளில்தான் மிகவும் பிரியம். இங்கிலாந்தின் கோடைகாலத்தில் கூட இவர் ஜன்னல்களை மூடி வைத்துக் கொண்டு சூடளிக்கும் யந்திரத்தின் உதவியால் மலபாரின் வைகாசி மாதத்து உஷ்ணத்தைப் பெறுவார்.

மனிதர்களை இவ்வளவு தூரம் ஆகர்ஷிக்கும் சக்தி பெற்ற இவருக்கு பிறருடன் நட்புக் கொள்வதென்பது மிகவும் சிரமமான காரியம். பிறரது நட்புக்காக இவர் எவ்வளவு ஏங்குகிருரென்பதும் பிறரிடம் இவர் எவ்வளவு அன்புடன் நடந்துகொள்கிருரென்பதும் இவருடன் நெருங்கிப் பழகுவோர்களுக்குத்தான் தெரியும். பொது ஜனங்களின்

மதிப்பைப் பெறுவதைவிடத் தனி நபர்களின் அன்பைப் பெறுவதுதான் மேனனுடைய தனித்தன்மை. அவர் குரல், அவர் தோற்றம் அவர் அபிப்பிராயங்கள் இவை மூலம் எந்தக் கூட்டத்திலும் பிரதானமாக விளங்குகிறார். விருந்துகளுக்குச் சென்றால் சிடு மூஞ்சியைப் போல் உணவைத் தொடாமலேயே இருப்பார். வீண் பேச்சே இவரிடம் காண முடியாது. இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் இவரிடம் நெருங்க முயலுவோர்களை இவர் மட்டந்தட்டி விடுவார். விருந்துக்குப் பின் பிரசங்கம் ஆரம்பமாகும் போது தான் மேனன் ஒரு புதிய அவதாரத்தில் தோன்றுகிறார். உடனே மடை திறந்த வெள்ளம் போல சொல் அடுக்குகள் வெளிவரும்.

மேனன்—பண்டித நேரு நட்பைப்பற்றியும் மேனனுக்கு நேருவிடம் உள்ள செல்வாக்கு பற்றியும் இந்தியாவிலேயே பலர் அதிசயப்படுவதுண்டு இவ்விருவர்கள் வாழ்க்கை வரலாறுகளில் உள்ள வேற்றுமை போல் வேறு எந்த மனிதர்களிடையே மிருக்காது. ஒருவர் வடநாட்டுப்பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்தவர். மற்றவர் மலையாளத்து மத்திய தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். நேரு குடும்பத்திற்கு ஒரு வாலிபனை இங்கிலரந்திற்குக் கல்வி பயில அனுப்பிவைப்பது தான் அவர்கள் அந்தஸ்துக்கு ஏற்றது. மேனன் குடும்பத் தாருக்கு டாக்டர் அன்னி பெஸண்ட் அம்மையாரின் நட்பும் பிரம்மஞான சங்கத்தாரின் தொடர்பும் கிடைக்காவிடில் மேனனை இங்கிலாந்திற்கு அனுப்பித்திருக்க முடியாது.

ஒரு மிகப் பிரபல இந்தியத் தலைவரான தன் தந்தையா ரால் ஜவஹர்லால் தலைவர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். ஸ்ரீ கிருஷ்ணமேனன் தன் வேர்வையைச் சொட்டியே தான் பதவிக்கு உயர்ந்தார்.

இவ்வளவு வேற்றுமைகளுள்ள இவ்விருவர்களுக் கிடையே ஒற்றுமையான அம்சங்களும் பலவுண்டு. இவ் விருவரும் முன்கோபிகள், உயர்ந்த நோக்கமில்லாதவர்களை இருவரும் கடுமையாக வெறுப்பவர்கள். ஒருவருக்கொருவர் புரிந்துள்ள உதவிகளுக்களவில்லை. அநேக இந்தியத் தலைவர் களில் ஒருவர் ஜவஹர்லாலும் என்ற நிலைமை இருக்கும் போதே ஸ்ரீகிருஷ்ணமேனன் ஜவஹர் தலைமையைப் பின்பற்றி யவர். நீண்ட காலமாகத் தன் தலைவரிடம் பக்தி விசுவாசங் கொண்டவர். அயல் நாடுகளில் ஸ்ரீ மேனன் தான் நேருவின் பிரதிபிம்பம். இன்று நேருவின் அயல்நாட்டுக் கொள்கை களைச் சரியாகப் புரிந்துகொண்டு தெளிவாக விளக்கஞ் செய்யும் ஒரே வியாக்கியான கர்த்தாவுமாவார் ஸ்ரீ வி.கே.கிருஷ்ண மேனன்.

—*New Statesman and Nation*

பதிமூன்றே! பயப்படோம்.

மேல் நாட்டாரின் மூட நம்பிக்கைகளில் ஒன்று 13 என்ற எண்ணைப் பற்றிய பீதியாகும். 13-ம் தேதியன்று நற்காரியங்கள் எதையும் துவக்கமாட்டார்கள். ஹோட்டல்களுக்குச் சென்றால் 13-ம் நம்பர் அறைக்குச் செல்லப் பயப்படுவார்கள். விருந்துக்கு, நண்பர்களையும் உறவினர்களையுமழைக்கும்போது 13 பேரை அழைக்கமாட்டார்கள்.

இவ்வளவெல்லாம் 13-ம் நெம்பரைப் பற்றி வெறுப்பிருந்தாலும் அமெரிக்க ஜனாதிபதியின் கையொப்பத்தின் கீழே போடப்படும் சர்க்கார் முத்திரையில் 13 என்ற எண்ணிக்கை எவ்வளவு தடவை வந்துள்ளதென்று பாருங்கள் :—

13 நக்ஷத்திரங்கள்.

13 கோடுகள்.

ஒரு கழுகின் காலில் 13 அம்புகள்.

13 மேகங்கள்.

நீதி வாக்கியத்தில் 13 எழுத்துக்கள்.

13 லாரல் இலைகள்.

13 காய்களுள்ள ஒரு கிளை.

13 சிறகுகள் இடது பாகத்தில்.

13 சிறகுகள் வலது பாகத்தில்.

13 சிறகுகள் வாலின் நுனியில்.

ஐக்கிய நாட்டின் சர்க்கார் கேடயம் என்ற ஆங்கில வாக்கியங்களில் 39 எழுத்துகள் (அதாவது 13-ம் நம்பரின் 3 பங்கு)

(காசிக்குச் செல்வது 'பிறவா வரத்திற்கென்றும் ராமேஸ்வரத்திற்குப் போவது பிறக்கும் வரம், பெறுவதற்கு மட்டுந்தான் என்று கருத வேண்டாம்.)

புண்ணியம் தேடு-புவியைச் சுற்று

●

க்ஷேத்ராடனம் செய்வதன் உத்தேசம் மனிதன் புண்ணியம் பெறுவதற்கு மட்டுமல்ல. பல ஸ்தலங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதும் கவர்ச்சிகரமான ஆலய சித்திர வேலைப்பாடுகளில் ஈடுபட்டுக் களிப்பதுதான் க்ஷேத்தாரடனத்தின் முக்கிய உத்தேசம்.

வடக்கே காசியிலிருந்து, தெற்கே காஞ்சி வரையிலும் உள்ள அநேக புண்ணிய ஸ்தலங்கள் மக்களை, ஆகர்ஷிப்பதற்குக் காரணம் இவை யாவும் சிற்பச்சிறப்புகள், கலையழகு முதலியவற்றுடன் ஆலயங்களால் நிறைந்தவையாயிருப்பதும் மக்கள், அறிஞர்கள், பலர் இந்த ஸ்தலங்களிலே வாழ்ந்திருந்ததும் சமாதியடைந்தது மாகும்.



புகழ்பெற்ற யாத்திரை ஸ்தலமான பூரி ஜகன்னாதம் மக்களை ஆகர்ஷிப்பதற்குக் முக்கிய காரணம் அதனருகேயுள்ள சமுத்திரத்தின் ஒப்பற்ற அழகும், நீண்ட காலமாக இதன் துறைமுகம் மூலமாய் செழித்தோங்கிய வியாபாரமும்தான்.

இரண்டு பிரமாண்ட நதிகள் சங்கமமாகுமிடத்தில் தோன்றியதாகும் 'தீர்த்தராஜ பிரயாக்' என்றழைக்கப்படும் அலஹாபாத். காணக்காணத் தெவிட்டாத அழகும் கம்பீரமும் வாய்ந்த ஹிமா

லயப் பர்வதத்தை யுகயுகாந்திரமாய் தரிசிக்க வந்தோர்களின் எண்ணிக்கைக்கு அளவேயில்லை. பனியால் மூடப்பட்ட பர்வதம் சமுத்திர தீரத்திலோ, தீவிலோ உள்ள அழகான நகரம், ஜன நடமாட்ட வசதியே யில்லாத வனாந்திரப் பிரதேசங்கள் முதலியவைதான் ஹிந்துக்களுக்கு ஏற்பட்டுள்ள யாத்திரை ஸ்தலங்களாகும்.

இயற்கையழகு படைத்த ஸ்தலங்கள் இந்தியாவில் மேற்கூறியவாறு பொருட்படுத்தப்பட்டுள்ளது. மேல் நாடுகளிலோ இவற்றைப் பொருட்படுத்துவது வேறு விதத்திலாகும். இயற்கையழகு படைத்த இடம் பாரதத்தில் தியானத்திற்கும், பக்திப் பரவசத்திற்கும், பரலோகத்தில் வைபவமான வாழ்வு பெறுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மேல் நாடுகளிலோ கேளிக்கைக்கும் சொந்த சுகபோகத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

உலகப் புகழ்பெற்ற நயகாரா நீர்வீழ்ச்சி கங்கா நதியிலிருந்தால் அதன் கம்பீரத் தோற்றமே வேறாயிருக்கும்! கணக்கற்ற யாத்திரிகர்களின் கால் நடைச் சப்தம் சாசுவதமாகக் கேட்டுக்கொண்டேயிருந்திருக்கும். உல்லாச நந்தவனங்களுக்குப் பதில் உள்ளத்தைக் கவரும் ஆஸ்ரமங்களும் நாகரீக நோட்டங்களுக்குப் பதில் காட்சி தரும் புனிதமான ஆலயங்களும், படாடோப கோஷ்டிகளுக்குப் பதிலாக கடுமையாகத் தவம்புரியும் தபஸ்விகளும் அங்கு தோன்றியிருப்பார்கள்.

தீர்த்தயாத்திரை மக்களின் பூகோள ஞானத்தை அபிவிருத்தி செய்வதற்கு துணைபுரிகிறது. பாரதத்தில் பற்பல இடங்கள் மட்டுமல்ல, நாட்டிற்கு ஜீவனையும் ஐக்கியத்தையும் மனித வாழ்க்கைக்கு அடிப்படையையும் அளிக்கும் வனாந்திரங்கள் நதிப்பிரதேசங்கள், ரம்மியான நீர்வீழ்ச்சிகள், புனிதமான சங்கமங்கள் முதலியனவும் இருக்கின்றன. இந்த உண்மையை மக்களுக்கு விளக்குவதற்காகவேதான் க்ஷேத்ராடனங்கள் இந்நாட்டில் ஏற்பட்டுள்ளன.

புனித ஸ்தலங்களுக்குச் செல்வது கடமையென்ற பழங்காலத்துக் கட்டுப்பாடு பாரத மக்களுக்கு நாடெங்கும் சுற்றுப்பிரயாணஞ் செய்வதை ஒரு பழக்கமாகிவிட்டது, இன்றுள்ள ரயில் வண்டிகளும், பஸ்களும் தோன்றுவதற்கு முன்பே, இந்தியாவிலுள்ள அநேக லக்ஷம் சிறுவர்களும் முதியோர்களும நாடெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்திருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள மாகாணங்களுக்கிடையே ஒற்றுமையும், ஒவ்வொரு மாகாணத்திலும் மற்ற மாகாணங்களைப்பற்றி ஞானமும் விருத்தியாவதற்கும் இயக்கங்கள் பொதுவாக நாடெங்கும் மக்களி

டையேபரவுவதற்கும் வித்திட்டது இந்தத் தீர்த்தயாத்திரை என்ற பழக்கம் தான்.

குறுகிய மனப்பான்மை வளருவதை தீர்த்த யாத்திரைப் பழக்கங்கள் தடுத்துவிட்டன. சுற்றுப் பிரயாணங்களால் தேகத்திற்கு அலுப்பு ஏற்படுமேயென்ற பீதியை அறவே அகற்றி தன் தாய் நாட்டைப் பூரணமாய் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை பாரத மக்களுக்கு அளித்து தீர்த்தயாத்திரை பழக்கம் தான். மகாபாரதத்தில் இந்தியாவிலுள்ள தீர்த்த யாத்திரை ஸ்தலங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஜாபிதாவிலிருந்து தீர்த்தயாத்திரையில் புராண கர்லங்களுக்கு முன்பிருந்தே இந்திய மக்கள் எவ்வளவு ஆர்வங்கொண்டிருந்தார்களென்றும் தெரிகிறது. மிகப் புனிதமான கங்காநதி, ஹரித்துவாரம், ப்ரயாக், பிறவா வரமளிக்கும் காசி, முத்தியளிக்கும் குருக்ஷேத்திரம் கிருஷ்ணபரமாத்மாவின் உறைவிடமான துவாரகை. நர நாராயணின் பத்ரிகாஸ்ரமம், நைமிசாரண்யத்திலுள்ள புஷ்கரா, அயோத்தியா சித்திரகூடம், காஞ்சி, துங்கபத்திரா, ஸ்ரீசைலம் சேதுபந்தனம் சூர்யன், சிவன், கணேசர், தேவி, ஹரி முதலியோர் வாசஞ்செய்யும் ஜம்புசாரம போன்ற அநேக யாத்திரை ஸ்தலங்கள் மகாபாரத ஜாபிதாவைச் சேர்ந்தவை. இந்த ஜாபிதாவிலுள்ள சில பெயர்களுக்கு இப்போது வேறு ரூபமிருக்கலாம். ஆனால் நாஸ்திகம் பரவியிருக்குமின்றும் பொதுமக்களுக்குத் தீர்த்த யாத்திவர மீதுள்ள ஆர்வம் ச்ற்றேனும் குன்றவில்லையெல்லாம் அனைவரும் அறிந்ததே.

—R. K. Mukerji (*B. U. J.*

At Madurai Convenient Place to Stay :

CENTRAL LODGE

48, West Perumal Maistri St.,

(Near Thangam Theatre)

MADURAI.

மூளையும் மனிதரும்

★

சிலர் மிகப் பெரிய மனிதர்களாயிருப்பதன் ரகஸ்யம் அவர்கள் மூளைகளைப் பரிசோதித்தால் தெரியவருமாவென்று விஞ்ஞானிகள் சர்ச்சை செய்து வருகின்றனா, சமீபத்தில் காலஞ் சென்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன மூளையைப் இப்போது பரிசோதித்து வருகிருர்கள்.

கபால அமைப்பிலிருந்தும் சிலருடைய தலைகளின் வீக்கங்களி லிருந்தும் அவர்களின் அறிவுத்திறனைப் பற்றித் தீர்மானிப்பதற் குதவும் சாஸ்திரம் ஒன்றுண்டு. விஞ்ஞானிகள் அவ்வளவாகக் கைக் கொள்ளாத ரேகைசாஸ்திரமும், ஜோதிஷமும் போன்று இதுவும் ஒரு சாஸ்திரமாகும்.

ஒரு மிகப் பெரிய மனிதரின் அறிவுத்திறனைப் பற்றி அவர் மூளைகளில் சில அறிகுறிகள் காணப்படுமென்று தான் அநேகர் நம்புகிருர்கள். மூளையிலுள்ள மடிப்புகளின் அமைப்பு, மிகச்சிறு அறைகளின் எண்ணிக்கை, மூளையில் நிறைந்துள்ள ரஸாயனப் பொருள்கள், மூளையின் ரத்த ஓட்டத்தின் அமைப்பு, மூளையின் எடை, நிறம் முதலிய அம்சங்களிலிருந்து ஒரு மனிதன் அடைந் துள்ள அறிவுத்திறனை நிர்ணயிக்கலாமாம்.

ஆனல் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்ளாத விஞ்ஞானிகளுமுண்டு. மூளையைப் பரிசோதித்தால் வியாதிகளின் அறிகுறிகளே தென்படுமென்பது இவர்களது முடிவு. மற்ற மனிதர்கள் ஒருவரை மிகப் பெரிய மனிதரென்று எந்தக் காரண த்திற்காக கருதினர்களென்பதைப் பற்றி மூளைப்பரிசோதனையால் ஒரு புலனும் கிட்டாதென்றும் இவர்கள் அடித்துக் கூறுகிருர்கள்.

ஒரு சாதாரண மனிதனின் மூளை மூன்று பவுண்டு கன முள்ளது. ஆனல் பிரபல மேதைகளின் மூளையின் எடை மூன்று பவுண்டிற்குக் குறைவாகத்தானிருந்துள்ளதாம். இதனல் மண்டை யின் கனத்திற்கும் மனிதத்தன்மைக்கும் சம்பந்தமே யில்லை யென்றுதானே கூறவேண்டியிருக்கிறது.

விஞ்ஞானி ஐன்ஸ்டீன் மூளையை ஆராய்ச்சி செய்பவர்கள் என்னதான் தீர்ப்பளித்தாலும் அவர் உலகத்தில் இதுவரை தோன்றிய மனிதர்களில் ஒரு மிகப் பெரிய மனிதரென்பதில் சற்றும் ஐயமில்லை.

பாரத நாட்டின் மிகப் பெரிய இன்ஜீனீயரும் அரசியல் நிபுணருமான சர். எம். விசுவேஸ்வரய்யா தன் மரணத்திற்குப் பிறகு தன் மூளையை ஒரு பிரபல அமைரிக்க கண் காட்சி சாலைக்கு (Smithsonian Institution, Washington). அளிப்பதாக வர்க்களித்து அதன் பிரகாரம் தன் உயில் பத்திரத்திலும் எழுதி வைத்துள்ளார்.

ஹிந்து விவாக மசோதா

★

ஹிந்து சமுதாயத்தை பலப்படுத்துவதற்கு ஒரு பெருந் துணையாகும் ஹிந்து விவாக மசோதா. ஒவ்வொரு ஹிந்து தனி நபருக்கும் சமுதாய பிரத்தியேக ஆசார கோட்பாடுகளிருக்கின்றவென்று கூறலாம். இதனால் ஹிந்து சமுதாய பழக்க வழக்கங்களைப் பாதிக்கும் சட்டங்கள் ஒரே குழப்பமயமாயிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்தினருக்கும் ஒவ்வொரு இனத்தாருக்கும் அவரவரது சட்டங்கள் தனியாக ஏற்பட்டுள்ளன. இம்மாதிரி ஹிந்துக்களிடையே நூற்றாண்டுகள் கணக்காக ஏற்பட்டுள்ள வேற்றுமைகள்தான் பாரத நாட்டில் வெளி நாட்டினரின் ஆதிக்க தோன்றக் காரணம்.

ஒரே இனம், ஒரே தேசம் என்ற கொள்கை நாட்டில் இல்லாமல் ஒவ்வொரு வருப்பினருக்கும் மற்றவரைக் காட்டிலும் தாங்கள் உயர்ந்தவர்களென்ற மனப்பான்மை இருந்ததனால் வெளி நாட்டாருக்கு ஒரு இனத்தாரை மற்றொரு இனத்தாருக்கு எதிரிகளாகத் தூண்டிவிட்டு எல்லோரையும் ஒன்றுபோல் அடிமையாக்குவது சாத்தியமாயிற்று.

பார்லிமெண்டில் ஹிந்து விவாக மசசோதாவைப்பற்றி நடந்த விவாதத்தில் இந்த மசோதா மூலம் ஹிந்து மதத்திற்கே ஆபத்து வந்துவிட்டதென்றும், ஹிந்து சமூகம் சிதறிப்போய்க் கொண்டிருக்கிறதென்றும் சாஸ்திரங்களையெல்லாம் புறக் கணித்துவிட்டார்களென்றும் அநேகர் கூக்கூரலிட்டனர். பிற்போக்கு மனப்பான்மை கொண்டவர்களின் தீவிரமான எதிர்ப்பு வெற்றி பெருததற்கு ஒரே காரணம் பண்டித நேருதான்.

ஹிந்து சமுதாயத்தைப் பலப்படுத்த வேண்டுமென்ற விருப்பத்துடன் இந்த மசோதாவை பண்டிதநேரு ஆதரிக்க வேண்டும். ஆனால் ஹிந்து சமுதாயித்திற்குப் பலமும் புத்துயிருமளித்த உத்தமரென்று நேருவை வருங் காலத்தவர் போற்றுவார்ளென்பதில் ஐயமில்லை.

சமூக விஷயங்களில் சீர்திருத்தம் வர வேண்டுமென்ற கிளர்ச்சி தோன்றும் போதெல்லாம் ஹிந்து சாஸ்திரங்களைப் புறக் கணிப்பது மகா பாபமென்று சிலர் கூக்கூரலிடுவது வழக்கமாயிருக்கிறது. சாஸ்திரங்களைத் தாங்கள்தான் இப்படி பாதுகாக்கிறார்களென்று நினைப்பவர்களுக்கு சாஸ்திரங்களின் உண்மைத் தன்மை தெரியுமோவென்பது சந்தேகம்தான். நாஸ்திகப், ஆஸ்திகம், நாக பூஜை, விருக்ஷ வணக்கம், லிங்கபூஜை, மானஸீகபூஜை மானைய யாவும் கடந்த அத்வைதம். ஆதிசேஷன் தன் படத்தை விரித்து உலகத்தைத் தாங்குகிறான் என்பது போன்ற ஆ யிரக் கணக்கான

மூட நம்பிக்கைகள் முதலியவற்றிற்கெல்லாம் ஹிந்து சாஸ்திரத்தில் இடமுண்டு: இம்மாதிரி பல தரப்பட்டக் கருத்துக்கள் கொண்ட சாஸ்திரங்களை வாழ்க்கைக்கு இன்றியமையாத பிரச்னைகளை விவாதிக்கும்போது இழுக்காமலிருப்பது உசிதமாயிருக்கும்.

இந்த மசோதாவிலுள்ள ஷரத்துகளில் விவாக ரத்துப்பற்றித்தான் களேபரமான விவாதங்கள் நடைபெற்றன. விவாகம் ஹிந்துக்களுக்கும் ஒரு வெறும் ஒப்பந்தமல்ல ; ஒரு புனித வைதீகச் சடங்காகும். ஆனால் நாம் நடைமுறையில் நூற்றாண்டுகள் கணக்காகக் காண்பதென்ன? இந்தப் புனிதமான வைதிகச் சடங்கு ஆண்களுக்கு நலமும் இன்பமுமளிப்பதற்கான ஒரு ஏற்பாடு என்பதுதான். இன்று 1955-ம் ஆண்டில்கூட கணவனை எரித்திடும் சிதையில் மனைவியையும் பலாத்காரமாக எரித்துவிடுவது அபூர்வமல்ல : ஆனால் மாண்டுபோன மனைவியை எரியவிடும் சிதையில் கணவனும் எரிந்து விட்டதாக இன்றுவரை கேள்விப்பட்டதுண்டா ? விவாக மசோதாவைப்பற்றி நடந்த விவாதங்களில், புராணப் பெண்மணிகளான சீதை, சாவித்திரி முதலியோரின் பெயர்களை அடிக்கடி குறிப்பிட்டவர்களுக்கு ராமன் சீதையைக் காட்டுக்கனுப்பி அங்கே மடியட்டும் என்று இருந்தது மறந்துபோயிற்று? தர்ம ஸ்வரூபி யென்று புகழ்பெற்ற தருமரும் அவர் சகோதரர்களும் சூதாட்டத்தில் திரௌபதையை வைத்ததையும் மறந்து விட்டார்களா ?

—*Caravan*

(Est. 1902)
எங்கும் புகழ்பெற்ற
ஆரோக்கிய திவ்யாமிர்தம்
மூலவியாதி, 9-க்கும் மலச்சிக்கல் ,உஷ்ணமேகம்,
பித்தவாவிற்கும் சிறந்தது.
1 சேர் டின் (48 நாள் மருந்து) 3—6—0
Props : **G. ABRAHAM & SONS,**
G. S. Sadanam
Kundara P. O. T. C. State.
N. B. Wanted Agents in all places on decent commission.

விவசாய விநோதங்கள்

●

புளிப்புத் திராக்ஷை எப்போதும் புளிப்பாகத்தானிருக்குமா? இல்லை, புளிப்பை மாற்ற முடியுமா? விவசாய நிபுணர்கள் இந்த விஷயத்தைப் பற்றிச் சில முடிவிற்கு வந்துள்ளார்கள்.

எல்லா ரகத் திராக்ஷைகளையும் இனிப்பாக்கிவிடலாமென்று கூறுகிறார்கள் இவர்கள். இதுமட்டுமல்ல; திராக்ஷையிலுள்ள சர்க்கரைப் பொருளை அதிகரிக்கலாமெனவும் கூறுகிறார்கள். விதவிதமான உரங்களை உபயோகித்து திராக்ஷையின் நிறத்தைக் கூட மாற்றலாமெனக் கூறுகிறார்கள்.

இந்தியாவில் மூன்று மாகாணங்களின் வியாபாரத்திற்குப் போதுமான அளவு திராக்ஷை பயிரிடப்படுகிறது. பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த நாசிக், பூனா ஜில்லாக்களில் ஆயிரம் ஏக்கரும், சென்னை மாகாணத்தில் மதுரை ஜில்லாவில் ஐம்பது ஏக்கரும், மைசூர் ராஜ்யத்தில் பங்களூரில் இருநூற்றைம்பது ஏக்கரும் திராக்ஷை பயிராகிறது.

பம்பாயில் திராக்ஷை விளைவு அதிகம். தென்னிந்தியாவில் தினுசுகள் அதிகம். புளிப்பு திராக்ஷையை இனிப்பு ரகமாக மாற்றுவது சாத்தியமாவென்று எவரும் வியப்புறவேண்டாம். விஞ்ஞானத்தின் உதவியால் மேல் நாடுகளில் இம்மாதிரி அநேக மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. புளிப்புள்ள பழங்களை இனிப்பு ரகமாக மாற்றுவது, தக்காளிப் பழத்தின் ருசியும், சாறும், உருளைக்கிழங்கின் சுவையும் கொண்ட ஒரு புது ரக பழ சிருஷ்டி, சிவப்பு ரகமான பழங்களை மஞ்சள் நிறமாக மாற்றுவது, மண்ணை உபயோகிக்காமலே காய்கறி பழ வகைகளைப் பயிர் செய்வது முதலிய பல அதிசயச் செயல்களை அமெரிக்காவிலுள்ள விவசாய நிபுணர்கள் சாதித்துள்ளார்கள்.

Ack : *Nafen* Report

திரட்டு

உன்னத மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

(TAMIL DIGEST)

சுவைமிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகள், தொடர் நாவல், தொடர் நாடகம், கதைகள், பல விசேஷ அம்சங்கள் நிறைந்தது.

(பெரிய அளவில்)

96 பக்கங்கள் விலை ஆறணுதான்.

வருட சந்தா ரூ 4—8—0

விவரங்களுக்கு :—

திரட்டு காரியாலயம்

22-A, நரசிங்கபுரம் தெரு,

மவுண்ட் ரோடு,

சென்னை-2.



அழகு படு(த்து)ம் பாடு

●

அழகைப் பற்றி எத்தனையோ கட்டுரைகள் படித்தாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகாய்த்தானிருக்கும். இதையும்தான் படித்துப் பாருங்களேன்...

அன்று காலையில் கதை, கட்டுரை ஏதேனும் எழுதலாமென்று உட்கார்ந்தேன். எதைப் பற்றி எழுதலாமென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது என் மனைவி சமையலறையிலிருந்து வந்து "ரொம்ப அழகாக இருக்கிறது...காலங்கார்த்தாலே காப்பியைச் சாப்பிட்டு விட்டுக் கதை எழுத உட்கார்ந்திருந்தால் காலக்ஷேபம் எப்படி நடக்கும்? காசை எடுத்துக் கொண்டு காந்தி மார்க்கெட்டுக்குப் போய்க் காய் கறி வாங்கி வாருங்கள்" என்றாள். அவள் அடுக்களையிலிருந்து அகத்துக்காரரிடம் வந்து அடுக்கு மொழியாய் அள்ளி வீசுவதே ஒரு அலாதி அழகாக இல்லையா?

கம்பன் வீட்டுக் கட்டுத் தரியும் கவிபாடுமென்பதுபோல், எழுத்தாளன் வீட்டு எறும்பு கூட எதுகை மோனையுடன் பேசுவதென்றால் அதுவே ஒரு அழகுதானே!

"அந்தச் சமயம் பையன் கல்விக்கழகு கசடற மொழிதல்... வணிகர்க்கழகு வளம் பொருளீட்டல், பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்று வாசித்துக்கொண்டிருந்தான். இந்த சூழ்நிலையை வைத்துக்கொண்டு ஏன் அழகைப் பற்றியே ஒரு கட்டுரை எழுதக்கூடாது என்று தோன்றி எழுதலானேன். பையனைக் கூப்பிட்டு அவன் கடைசியாக வாசித்ததை அவன் அம்மாவுக்கு இன்னொரு தடவை பலமாகப் படித்துக் காண்பிக்கச் சொன்னேன். அவளுக்கு ஒரு புறம் ஆத்திரமும், சிரிப்பும் வந்துவிடவே, "தெரியாதா... நீங்கள் கதை எழுதி வாழ்ந்த அழகு" என்று சொல்லிவிட்டு முகத்தை 'அழகு காண்பித்து விட்டு உள்ளே போனதும் ஒரு அழகாகத்தான் இருந்தது.

அழகைப் பற்றி என் மனம் சிந்தனை செய்தது. கடவுளின் சிருஷ்டியே பெரும்பாலும் அழகை அடிப்படையாகக் கொண்டது. இயற்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அழகு காட்சியளிக்கிறது. ஒவ்வொரு வஸ்துவிலும், ஜீவராசி, மனித வர்க்கத்திலும், "அழகு" என்ற கவர்ச்சியில்லையென்றால், உலகில் விரக்தியும், வெறுப்பும் சுலபத்தில் ஏற்பட்டுவிடும். அழகை ரஸிக்காத ஜீவராசிகள் இருக்க முடியாது. தாவர வர்க்கங்களில் சில செடிகளை சங்கீதமாகிய அழகுக் கலையால் வளர்க்கலாமென்று ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையைப்படித்தேன். கண்ணால்

பார்ப்பதற்கு மட்டும் இனிமை மையாக இருப்பதை 'அழகு' என்று நினைப்பதைவிட புலன் களடையும் இன்பப் பொருள் களை அழகின் பரிணமமாகக் கொள்ளலாம்.

உதாரணமாக, சங்கீதம் கேட் கவும், மலர்களின் நறுமணம் முகரவும், அருமையான கவிகள் படிப்பதற்கும், சிந்தனைக்கும் அழகாக இருக்கின்றனவல் லவா? சந்நியாசிக்கும், சாதா ரண மனிதனுக்கும் அழகை ரஸிப்பபதில் வித்தியாசம் என்னவென்ருல் சந்நியாசி அழ குப்பொருளை ரஸிப்பதோடு நிறுத்திக்கொள்ளுகிருன். சாதா ரண மனிதன் அழகை ரஸிப்ப தோடு மட்டுமின்றி சிந்தனை யைச் செலுத்திய வண்ணம், அதை அடைந்து அனுபவிக்க முயலுகிருன்.

நீங்கள் படித்து, கேட்டு, அலுத்துப்போயிருக்கும் ''நீல வானிலே...நெடுங் கடலினலை யிலே, சோலைக்காற்றினிலே—அந்தரப் புன்னகையிலே, மானின் நடையிலே—மயிலின் தோகையிலே...'' காணும் இத் யாழி அழகை பற்றிச் சொல்லப் போவதில்லை. அதற்கென்று ''காப்பியின் ருசியினிலே... காரின் பவனியிலே, காகிகத் தின் நடிப்பினிலே. நாட்டியத் தின் நளினத்திலே, கதையின் கருத்தினிலே-கானத்தின் இனி மையிலே, சினிமா சித்திரத் திலே-ரேடியோவின் ஒலியிலே'' காணும், கேட்கும், சுவைக்கும் நவநாகரிக அழகுகளைப் பற்றி யும் சொல்லப்போவதில்லை.

சுருங்கச் சொல்லின், சரித் திர, புராண தற்கால அழகின் 'கதி' எப்படிப்பட்டது என்பதை ஆராய்வோம்.

யௌவன வயதுடன் கூடிய ஒரு காதலி தென்றலை உணரு வதைப்பற்றி ஒரு கவி, ''யௌவ னத்தை மன்மதனுகவும், தென் றலை வசந்தனுகவும்'' வைத்து அவளை விரக தாபத்தால் (இன்ப வேதனை) வருத்து வதாக வெகு அழகாக வர்ணித் திருக்கிருர். அதன்படி பருவ காலங்களில் வசந்தம் எப்படி அழகானதோ, அதுபோல வாழ்க்கையில் யௌவனப் பரு வம் மிக அழகானது என்று சொல்லத் தேவையில்லை யௌவன மிடுக்கிலே ஆண் பெண் இருபாலாருக்கும் அழ கின் ஜீவன் அணுஅணுவாகத் திகழ்வதைப் பார்க்கிருேம். அத ஞல்தான் மன்மதன்—ரதியை அழகுத் தெய்வங்களாக நம் நாட்டில் கொண்டாடுகிருேம்.

புராண காலத்தில், விசுவா மித்திரர் போன்ற சிறந்த முனி வர்கள் முதற்கொண்டு கந்தர்வ அப்சரஸ்-போன்ற தேவகன்னி கைகளின் அழகையும், நாட்டி யக்கலையழகையும் கண்டு மனசைப்பறிகொடுத்ததோடல் லாமல், அனுபவிக்கவும் தொடங்கியதால்ஏற்பட்ட விபரீ தங்களை நாமறிவோம்.

ஸீதை அழகின் அவதாரமா யிருந்ததுதானே ராமாயண இதி காசத்துக்குக் காரணம்! துஷ் யந்தன் அழகில் மெய்ம்மறந்து மதிமயங்கிய சகுந்தலை துர்வா சரின் சாபத்துக்கு ஆளானது அழகு படுத்திய பாடுதானே! அழகு ராணி அகலிகையை அணுகிய அமரேந்திரன் அடைந்த அவல நிலையை அறி

யாரேதார் உண்டோ! வானத்தே உலவும் கந்தர்வனின் நிழல் நிலத்தில் விழும்போது, ஆற்றிலே நீர் கொண்டுவரச் சென்ற ஜமதக்னி முனிவரின் மனைவி ரேணுகா அந்த கந்தர்வனின் அழகைப் பற்றி நினைத்தாள். அதனை அறிந்த முனிவர் தன் புத்திரர்களை விட்டு அவனைக் கொல்லச் சொன்ன கதை "அழகு" செய்த லீலைகளை ஞாபகமூட்டும். தமயந்தியிடம் புகுந்த அழகினால் நளன்மீது பொறாமை கொண்ட சனி பகவான், நள—தமயந்தி இருவரையும் ஆட்டி வைத்தாரல்லவா? தாயை யொத்த அழகிதான் தனக்கு மனைவியாக வரவேண்டும் என்று பார்வதிதேவியிடமே கேட்டதாகச் சொல்லப்படும் விநாயகர் வீதி மூலைகளில் வீற்றிருப்பதும் விந்தையன்றோ?

சரித்திர காலத்திலும் அழகு படுத்திய பாடு அனந்தம்! நூர்ஜஹானின் அழகில் லயித்த ஜஹாங்கீரின் வரலாறு யாவரும் அறிந்ததே. மும்தாஜ் பேகத்தின் அழகுச் சின்னமாக உலகம் வியக்கும்படி அழகிய ஞாபகார்த்த சின்னமாக தாஜ் மஹாலை எழுப்பிய ஷாஜஹானை சிறந்த 'அழகு ரஸிகன்-அழகுப் பிரும்மா' அல்லவா? ராஜபுத்திர மஹாராணி பத்மினியைக் கண்ணாடியிலாவது பார்க்க வேண்டும் என்று அலாவுதீன் கில்ஜி விரும்பினால் அவள் அழகைப் பற்றிச் சொல்வானேன்! பில்ஹணனும், யாமினியும் சௌந்தர்யமாய் இருந்ததால்தானே "குருடன் — குரூபி" என்று சொல்லி அவர்களை திரையிட்டுப் பிரித்தனர். தந்தையின் எதிரி என்பதையும் மறந்து, ஸம்யுக்தை பிருதிவி ராஜனின் அழகில் லயித்து ஓடிப்போனாள்.

இன்று அழகும் வெகுவாக நாகரிகமடைந்திருக்கிறது. முன்பெல்லாம் ஜீவராசிகளிடம் இயற்கையாக அமைந்திருந்த அழகை ரசித்தோம். இக்காலத்தில் ஜடப் பொருள்களுக்குக் கூட செயற்கை அழகால் கவர்ச்சி செய்யும் நவீன நாகரிகத்தையும் காண்கிறோம். வீடு, நாற்காலி, தலையணை ஜன்னல் முதலிய பொருள்களுக்குப் பலவிதமாக அலங்காரம் செய்து அழகு பார்க்கிறோம். 'ஸ்னோ'வின் பரிமளத்தால்—சோப்பின் நறுமணத்தால் பவுடரின் பகட்டினால் அழகில்லாதவர்களிடம் கூட அது படும் பாட்டைப் பார்க்கிறோம். கலியுகத்திலே, காலத்தின் வேகத்திலே, அழகைப் "போட்டி" வைத்துத்தான் பொறுக்கியெடுக்கும் நிலை வந்திருப்பதையும் காண்கிறோம். குதிரைக் குட்டிக்குக் கிராப்பு வெட்டிவிடும் அழகையும், நாய்க்குட்டிக்கு "எம்பிராய்டரி" வேலை செய்த "ஸ்வெட்டர்" போடும் அழகையும், கராச்சி மிருகக்காட்சிசாலையில் புலிக்குட்டி 'காட்லிவ ராயில்', முட்டை, "மல்டிவைட்டமின் காப்ஸ்யூல்" சாப்பிடும் அழகையும் நம் கண்ணெதிரே காண்கிறோம்.

என்னைக் கேட்டால் ஒரு வார்த்தை சொல்லுவேன். அன்று இதிஹாஸ புராண சரித்திர காலங்களில் அழகு பல இடங்களில் புகுந்து போரும், விபரீதங்களும் உண்

டாக்கி, அது படுத்தும் பாட்டைப் பார்த்தோம். அதற்குத் தண்டனையாக இன்று அழகு இல்லாதவர்களிடமும், சினிமா–நாடகம்-விளம்பரங்கள் முதலிய துறைகளிலும் புகுந்து அது பல விதத்தில் படும் பாட்டையும் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

எல்லாப் பொருள்களுக்கும் அழகு மட்டும் இருக்கலாம். கலையழகிற்கு ஜீவனும், பாவமும் அவசியம். ஆனால் பகுத்தறிவு படைத்த மனித வர்க்கத்துக்கு அழகு மட்டும் போதாது. அது நிலையல்லவாதலால், அத்துடன், அதைவிட முக்கியமாக அறிவும், அடக்கமும், அன்பும் சேர்ந்திருந்தால் அதிசயப் பிறவியென்றே சொல்லலாம். அதிருஷ்டமும் கூட இருந்தால் அபூர்வ தெய்வப்பிறவியென்று சொல்லிவிடலாம். அழகைப் பற்றி இன்னம் எவ்வளவு பக்கம் வேண்டுமானால் எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் வளர்த்தினால் இப்போது நம்மிருவருக்குமே அழகாக இருக்காது.

என் பையன் ஒரு பாடத்தை வைத்துக்கொண்டு "தமிழ் மொழியே தனியழகு" என்று வாசித்தான். அந்த சொற்றொடரில் 'பூ'கரத்தின் விசேஷ அழகு மணம் ஒவ்வொரு வார்த்தையிலும் கமழ்கிறது பாருங்கள்.

'கலாபாரதி'

D. வேலாயுதம் பிள்ளை

சிங்கப்பூர் விடுதி

1/8, வானல்ஸ் ரோட்,

எழும்பூர் P. O. மதராஸ்-8.

குறைந்த சார்ஜில் ரூம் வாடகை விடப்படும்.

S. I. R. ஐஸ் பேக்டரி எதிரில் இருக்கிறது.

மழைக்கென்றே வாழும் மண்டூகம்

★

மழை பெய்து ஓய்ந்தவுடன் பள்ளங்கள், குட்டைகள் குளங்கள் அருகே சென்றால் காது வெடித்துப் போகும்படி சத்தம் கேட்கிறது. இந்தச் சத்தத்திற்குக் காரணமான அற்ப ஜந்துவைப் பாராதவர்கள் ஆயிரத்தில் ஒருவரிருக்கலாம். கேளாதவர்கள் செவிடர்கள் மட்டும்தான்! மழைக்காலத்தில், மழை ஓய்ந்திருக்கும் சமயத்தில் இந்த தவளை கானத்தை ஊரெங்கும் கேட்கலாம்.

ஒரு கவியின் கருத்துப் பிரகாரம் தவளையின் சப்தம் இவ்வளவு தீவிரமாயிருப்பதற்குக் காரணமென்ன வென்றால் மழைக்காலம் வந்ததைப் பற்றியோ வெகு நாளாய்க் காத்திருந்து ஏங்கி அந்த மழை பெய்ததைப் பற்றியோ தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறதாம் இந்த மண்டூகம்.

வெயில் காலத்திலும் மழையில்லாதபோதும் நித்திரையில் மூழ்கியிருக்கும் தவளை அதனாலேயே மழை பெய்யும்போது மட்டுமே இந்த மண்டூகங்கள் வெளியே புறப்படுகின்றன.

தவளைகளில் பல ரகங்களுண்டு. நீரிலும், ஈரமான நிலங்களிலும் வசிக்கும் ரகம் ஒன்று. மரங்களில் வசிக்கும் ரகம் ஒன்று. மரத்தில் வாழும் மண்டூகம் நீரில் நீண்டகாலம் வாழ முடியாது.

பொதுவாக ஈரப்பசையில்லாத நிலங்களில் மண்டூகங்கள் வாழ முடியாது. மண்டூகங்களில் சிறிய ரகங்கள் சதா கத்திக் கொண்டேயிருக்கும். சிறிய ரகங்களை வீடுகளிலே வளர்ப்பதுண்டு. நாள் முழுவதுமே ஆகாரம் ஒன்றும் தேவையில்லாமலே சப்தமிட்டுக் கொண்டிருப்பதே இதன் சுபாவம்.

மனிதனைக் கண்டால் மற்ற ஜந்துக்களுக்குள்ள பயம் தவளைகளுக்குக் கிடையாது. இதைப் பிடிக்க முயலும்போது தப்பித்துக் கொள்ள பார்க்கும்; தப்பித்துக்கொள்ள முடியாவிடில் மனிதனிடம் அகப்பட்டுக்கொண்டு திருப்தியுடன் வாழும்.

Hugh M. Halliday
[*Hindusthan Standard*.]

வேலைதேடும் படலம்

●

சென்னை மாநகர நிரந்தர வாசிகளும், சில நாட்கள் தங்கி விட்டுச் செல்பவர்களும், இந் நகரைச் சுற்றிப் பார்க்க வருகிற வர்களும் இரண்டுவிதமான போர்டுகளை எங்கும் காணத் தவறுவதில்லை.

ஒன்று "நாய் ஜாக்கிரதை," மற்றொன்று "வேலை காலியில்லை" சில இடங்களில் இரண்டையும் சேர்த்தே காணலாம்! அதற்கு காரணம், வேலையில்லை என்று தெரிந்தும் உள்ளே வர எத்தனிப் பவர்கள், நாய்க்குப் பயந்தாவது உள்ளே வரமாட்டார்கள் என் பது அவர்கள் எண்ணம்.

ஒன்று குடியிருக்கும் வீடுகளி லும் (ஏன், காலி பங்களாக்களி லும் சில சமயம் காணலாம்!) மற்றொன்று, மிகப் பெரிய ஆபீஸ் களிலும், சிறிய அலுவலகங்களி லும், இருக்கும் பாக்கியத்தை யடைந்திருக்கின்றன.

நான் இன்று இந்நகரில் வேலை யின்றி (வேலை தேடுவதை ஒரு வேலையாக ஏற்க யாரும் சம்ம திப்பதில்லையாகையால்) திண் டாடி, தெருத் தெருவாக, கம் பெனிகள், ஆபீஸ்கள் இவை களைப் பருந்துபோலச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருக் கும் பலபேர்களில் ஒருவன்.

வேலை தேடுபவர்களில், உத்த மன், மத்திமன், அதமன், எனப் படுபவர்கள் இருக்கிறார்கள். உத் தமன் எனக் கருதத் தக்கவர்கள், அடாது மழை பெய்தாலும் அல் லது விடாமல் வெயில் கொளுத் தினாலும், வீட்டிற்குப் பயந்தோ. அல்லது தங்கள் மனச்சாட்சிக் குப் பயந்தோ நாள் தவறாமல் (சூரியன் உதிக்க மறந்தாலும் மறக்கலாம், ஆனால் இவர்கள் மறக்கவும்கூட நினைக்கமாட்டார் கள்), தங்கள் சர்டிபிகேட்டுகள் சமேதராய், ஆபீஸ்ஆபீஸாக ஏறி இறங்குபவர்கள்.

மத்திமன் என்பவர்கள் தின சரி பேப்பர்களில் வருகின்ற "வான்டட்"(தேவை)காலத்திற்கு எழுதிப்போட்டுவிட்டு, 'கிருஷ்ணா, ராமா' என்று பதிலை எதிர்பார்த் திருப்பவர்கள்.

அதமர்கள் வேலைதேடும் வேலை யைத் தங்கள் தந்தையிடமோ அல்லது தமயனிடமோ (இந்தக் காலத்தில் அக்காக்கள் அல்லது தங்கைகளிடம்) விட்டுவிட்டு "ஜாலி"யாக, சினிமாவிற்கோ பீச்சிற்கோ கிளம்புகிறவர்கள்.

நான் அன்று மவுண்ட் ரோடி லுள்ள ஒரு பெரிய கம்பெனியின் ஆபீஸில், வேலையில்லை யென்ற போர்டைப் பார்த்தும் பாராதது போல, (நல்ல காலம் அங்கு "நாய் ஜாக்கிரதை" என்ற போர்டு இல்லை) நுழைந்து, மானேஜரின் அறையின் அருகிலி ருந்த "வெயிட்டிங் பெஞ்சில்" அமர்ந்தேன்.

இரண்டு யுகங்கள் கழிந்திருக் கும் (எனக்கு இரண்டு யுகம்,) ஆனால் உண்மையில் இரண்டு நிமிடங்கூட ஆகவில்லை. அதற்குள் ப்யூன் ஒருவன் என்னை மானேஜரிடம் கொண்டு விட்டுவிட்டு வெளியே சென்றான்.

மானேஜர் பார்ப்பதற்கு மிக வும் வாட்டசாட்டமாக இருந்தார் "டீக்"காக ஆடை அணிந்திருந் தார். கைக் கடிகாரத்தின் தங்கச் செயின், தகதகவென்று ஜ்வலித் தது. வாயிலிருந்து "கோல்ட் பிளேக்" புகை நம் வீட்டு அடுப்பு போல புகையை வெளியே தள் ளிக்கொண்டிருந்தது. எடுத்த

வுடன் மடமடவென்று கேள்விகளை யடுக்கிக்கொண்டே (புகை விடுவதையும் சவனிக்கத் தவறவில்லை) என்னை விசாரிக்கக ஆரம்பித்தார்.

"உங்கள் பெயரென்ன?"

"ஸி. வி. நாதன்" (இந்தக் காலத்தில் பெயர்களிலும் நாகரிகம் வேண்டிக்கிடக்கிறது)

"உம்முடைய க்வாலிபிகேஷன்?"

"பி. ஏ. முதல் வகுப்பில் 'பாஸ்' செய்திருக்கிறேன்."

"ஆங்கிலம் நன்றாக படிக்க வருமா உமக்கு?'

"நன்றாகப் படிப்பேன"(என்ன அவமானம்.)

"படித்தால் அர்த்தம் புரியுமா"

"நன்றாகப் புரியும்' (இன்னொரு இடமாயிருந்தால் மூக்கை யுடைத்திருப்பேன்.)

"கண்களில் ஏதாவது கோளாறு உண்டோ?"

"எனக்குத் தெரிந்த வரையிலும் ஒன்றுமில்லை சார்."

அடுத்த கணம் அவருடைய குரலில் மாறுதல் தொனித்தது.

"ஏன், மிஸ்டர், பி. ஏ. முதல் கிளாஸில் பாஸ் செய்திருக்கிறீர். ஆனால் வெளியேயிருக்கும் ஒரு ஆங்கில போர்டைப் படித்து அர்த்தம் புரிந்துகொள்ள முடியவில்லையே உமக்கு, எப்படி, நீர் இங்கு வேலை செய்யப்போகிறீர்"

ஆபீஸ் மாறி நுழைந்து விட்டோமோ என்ற சந்தேகத்துடன் விழிக்க ஆரம்பித்தேன் நான்.

"நோ வேகன்ஸி" என்ற போர்டு போட்டிருக்கே, உமக்குத் தெரியவில்லைபா உம், நடய்யா, உங்களுக்குத்தான் வேலையில்லையென்றால், எங்கள் வேலையையும் கெடுக்க வருகிறீர்களே."

எனக்குத் தலை சுற்றியது. எப்படியோ தட்டுத்தடுமாறி வெளியே வந்தேன். வெளியே அந்த பாழாய்ப்போன போர்டு என்னைப் பார்த்து விஷமச் சிரிப்பு சிரித்தது.

சேலக்கரை எஸ். கிருஷ்ணன்.



அசோகா சுகந்த பாக்குத்தூள்

Mercury Chit Funds Ltd.

22-A, Narasingapuram Street

MOUNT ROAD, MADRAS

STARTING SHORTLY

NEW SERIES OF

AUCTION CHITS

20 Tickets of Rs. 50/- (Capital Rs. 1,000)

Date of Commencement 6—7—'55

PARTICULARS ON APPLICATION

K. R. SUBRAMANIA IYER

Managing Director.

சுதந்திரம் ஏமாற்றிய சேனபதி

★

சமீபத்தில் தீவிரமாய்த் தொடங்கியுள்ள கோவா சத்யாக்கிரகத்தில் கலந்துகொண்ட மகாதேவ்சேனபதி பாண்டுரங்க பாபட் பழுத்த தேசபக்தராவார்.

கோவா சத்யாக்கிரகத்தில் பங்கெடுத்துக் கொண்டதற்காக கோவா போலீசார் இவரைச் சமீபத்தில் கடுமையாக தாக்கியுள்ளார்கள்.

இந்திய சுதந்திர இயக்கத்திற்காக இவர் பங்கெடுத்துக் கொள்ளாத எந்த சத்யாக்கிரகமும் இல்லையென்றே கூறலாம்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் இவருடைய பெயரே மறைந்துவிட்டது. வீரத்திற்கும் தீரத்திற்கும் உகந்த காலம் மறைந்துவிட்டதென்று இவர் மிகவும் மனோவேதனை கொண்டிருந்த போதுதான் கோவா சத்யாக்கிரக இயக்கம் துவங்கியது.

எழுபத்தைந்து வயதுள்ள இந்தத் தியாகச் சுடருக்கு இந்த இயக்கம் ஒரு தக்க சமய சஞ்சீவியாகிவிட்டது.

பம்பாய் மாகர்ணத்தில் அகமத்நகர் ஜில்லாவில் பார்னர் தாலுகாவில் பிறந்தவர் சேனபதி பாபட். பம்பாய் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்று எடின்பரோ சர்வகலாசாலைக்கு இன்ஜினீரிங் கல்வி பெறச் சென்றார்.

எடின்பரோவில் கல்வி பயின்று கொண்டிருக்கும் போதுதான் இந்தியாவில் நிலவியிருந்த பிரிட்டிஷ் கட்சியை எதிர்த்துப் பிரசங்கம் செய்ததற்காக இவருக்குக் கிடைத்திருந்த சர்க்கார் உபகாரச் சம்பளம் நிறுத்தப்பட்டது. பிறகு எடின்பரோவைவிட்டு இவர் லண்டன் சர்வகலாசாலைக்குச் சென்றார்.

லண்டனில் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஸ்ரீமதி காமா முதலிய தீவிர இந்திய தேசபக்தர்களைச் சந்தித்தார். இதன் விளைவால் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியையொழிப்பதற்காக புரட்சி செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டார். லண்டனிலிருக்கும்போது குண்டுகள் தயாரிப்பதற்கும் கற்றுக்கொண்டார். முடிவில் ரகசியமாய் இந்தியா வந்து சேர்ந்தார். கல்கத்தாவில் நடந்த ஒரு வெடி குண்டு வழக்கில் போலீசார் இவரைச் சிக்க வைக்க முயன்றனர். ஆனால் இவர் போலீஸாரிடம் அகப்படாமல் நாலைந்து வருஷங்கள் தலைமறைவாயிருந்தார். கடைசியில் ஒரு நண்பனின் துரோகச் செயலால் சிறைக்குச் செல்ல நேரிட்டது.

1920-ம் ஆண்டில் நடந்த சத்யாக்கிரக இயக்கத்தில் மூர்ஷி என்ற கிராமத்தில் இவர் சத்தி

யாக்கிரகத்தை நடத்திய திறமையைக் கண்டு வியந்துதான் மக்கள் இவரை சேனபதி என்று அழைக்கலாயினர்.

அன்றும் இன்றும் இவருக்கு அஹிம்சையில் நம்பிக்கையே கிடையாது. பிரிட்டிஷாரைக் இந்தியாவைவிட்டுப் பலாத்காரமாய்த்தான் விரட்ட வேண்டுமென்று மிகத் தீவிரமாய்ப் பிரசாரஞ் செய்ததற்காக ஏழரை வருடம் சிறைத்தண்டனையடைந்தார். சுதந்திரம் கிட்டிய பின்னர் ஏமாற்ற மடைந்த பல புரட்சி வீரர்களிலொருவர் சேனபதி பாபட்.

உன்னத லட்சியத்திற்கு பொதுவாக பொதுமக்களின் ஒத்துழைப்பை இப்போது காண்பதே அரிதென்று இவர் மிகவும் ஏங்குகிறுர்.

சுதந்திர இயக்கம் நடந்து கொண்டிருந்தபோது தலைவர்கள் அனைவர்களுக்குமிருந்த உன்னத நோக்கங்கள் இப்போது மறைந்துபோனதற்கும் பொதுமக்களிடையே சூது, ஊழல் முதலியவற்றை வளர்ப்பதற்கும், காங்கிரஸும் சர்க்காரும்தான் காரணமென்று மிகவும் ஆத்திரப்படுகிறுர்.

—*Onlooker.*

உடல் ஆஜர் மூளை ரஜா!

இஸ்லாமியர்கள் மசூதிக்குப் பிரார்த்தனை புரியச் செல்லும்போது தங்கள் பாதரக்ஷைகளை வெளியே வைத்துவிட்டுப் போவது வழக்கம்.

ஆனல் கிறிஸ்துவர்கள் தேவாலயத்திற்குப் பிரார்த்தனைக்குச் செல்லும்போது தங்கள்மூளையை வெளியே வைத்துவிட்டுச் செல்கின்றனர். மாதாகோயிலிலுள்ள பாதிரிகள் அவரவர் ஊர்களிலுள்ள செல்வந்தரான மூடர்கள் எப்படித்தான் தரித்திர நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறுர்களென்பதைப் பற்றி வியப்படைகிறுர்கள். அவரவர்கள் மத விஷயங்களில் செலுத்தும் மூளையையே வியாபாரத்திலும் செலுத்துவார்களானல் அவர்களால் ஒரு செப்புக் காசு கூடச் சம்பாதிக்க முடியாதே! மனிதனின் தொல்லைகளுக்கெல்லாம் உண்மைக் காரணமென்னவென்றுல் பெரும்பாலோர்களின் உடலிலிருந்து மூளை ரஜா பெற்றிருப்பது தான். பெரும்பாலோர் அவர்களது கடமைகளைக் கண்மூடித்தனமாகச் செய்து கொண்டிருக்கிறுர்களே தவிர தங்கள் மூளையைச் சற்றேனும் உபயோகிப்பதில்லை.

—Simeon Stylites in the *Christian Century*.

நோய்க் கிடங்கொடேல்

★

இக்கட்டுரையை எழுதுபவர் இந்திய வைத்தியத் துறையில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாகப் பணிசெய்து நல்ல அனுபவம் பெற்றவர். இவர் தமது தேர்ந்த அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகளை பொதுமக்கள் நலன் கருதி தொடர்ந்து பல சிறு கட்டுரைகளாக வெளியிட முன்வந்துள்ளார். தேக ஆரோக்கியத்தில் அக்கறையுடையவர்கள் இவரது வழி முறைகளைப் பின்பற்றி குறைந்த செலவில் பல்வேறு தீராத நோய்களும் தீரப் பெற்று திடகாத்திரத்துடன் வாழ்வார்களாக.

ஏழை எளியவர்களும் சுலபமான முறையில் அதிகப் பணச் செலவின்றி தாமே மருத்துவம் செய்து கொள்ளக்கூடிய பல அரிய யோசனைகளை இவ்வாசிரியர் விளக்குவார்கள்.

★

ஆயுர்வேத சாஸ்திரத்தில் குறைந்த செலவில் உயர்ந்த பலனளிக்கக்கூடிய மருந்துகள் பல இருக்கின்றனவென்பது அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம். அப்படித் தெரிந்திருந்தாலும் அவற்றைத் தாங்களே தயார் செய்யும் முறைகள் சிலருக்குத் தெரியாமல் இருக்கும். தங்களைப் பீடிக்கும் பல வியாதிகளை நம் வாசக நண்பர்கள் தங்களுடைய கையாலேயே குறைந்த செலவில் தயார் செய்த மருந்துகளைக்கொண்டு குணப்படுத்தும் முறையைக் காண்பிப்பதையே நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரையைத் தொடர்ச்சியாக எழுத முன்வந்துள்ளேன். தொடர்ச்சியாக இதைப் படிப்பவர்கள் சிறிதேனும் பயனடைவார்களானால் அதுவே இக்கட்டுரை எழுதும் எனக்கு ஆறுதலையளிக்கும்.

இன்று நோயாளிகளாக மருத்துவ நிலையங்களுக்கு வருவோரில் 90 சத வீதத்தினர், "பசி இல்லை, பசி இல்லை" என்றே கூக்குரலிடுகின்றனர். இதற்கு பல அடிப்படையான காரணங்கள் உண்டு. ஏன் பசி எடுப்பதில்லை என்றால் அகாலத்தில் அகப்பட்ட ஆகாரத்தை உட்கொள்ளுவதாலேயே ஆகும். அளவான உணவை அதற்குரிய நேரத்தில் உட்கொள்வதன் மூலம் பல்வேறு நோய்கள் வராமல் தடுக்க முடியும். ஆனால் பலர் இதைத் தங்கள் அன்றாட வாழ்வில் அனுசரிப்பதில்லை. காரணம் சிலருடைய அலட்சிய மனப்பான்மையும் மற்றும் சிலர் விஷயத்தில் வறு

மைச் சூழ்நிலையுமேயாகும். வாழ்க்கையில் வசதியுள்ளவர்களும் வசதியற்றவர்களும் வெவ்வேறு காரணங்களால் ஆகார நியமத்தைச் சரியாக அனுஷ்டிப்பதில்லை.

அவ்வாறு அகாலத்தில் உட்கொண்ட உணவு சரியாக ஜீரணிப்பதில்லை. இதனால் வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு பல நோய்களில் கொண்டுபோய் விடுகிறது. பசி எடுக்காமல் வயிற்றில் மந்தம் தட்டுகிறது. இத்தகையவர்களுக்கு அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லப்பட்டுள்ள அஷ்ட சூர்ணம் மிக உபயோகமுள்ளது. அதைச் செய்யும் முறை பின்வருமாறு:—

சுக்கு, மிளகு, ஜீரகம், கருஞ்ஜீரகம், திப்பிலி, ஓமம், இந்துப்பு, பெருங்காயம் முதலிய 8 மருந்துச் சரக்குகளை சம எடை எடுத்துக்கொண்டு அதில் ஒன்று முதல் ஆறு வரையுள்ள சாமான்களை நன்ருக வெயிலில் காயவைத்து, பொடிசெய்து, மெல்லிய சல்லடையில் சலித்துக் கொள்ள வேண்டும். பிறகு இந்துப்பைத் தனியாக பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகு பெருங்காயத்தை போதுமான அளவு நெய்யில் பொறித்து உரலில் இடித்துப் பொடி செய்து கொண்டு, எல்லா சூரணத்தையும் நன்ருகக் கலந்து புட்டியில் போட்டு வைததுக்கொள்ள வேண்டும்.

காலை, மாலை இரு வேளைகளிலும் வெந்நீர் அல்லது மோர் இவற்றுடன் கலந்து சாப்பிடலாம். அல்லது உணவு உட்கொள்ளும் பொழுதும் முதல் பிடி சாதத்தில் நெய்யுடன் கலந்து சாப்பிடலாம்.

அளவு—குழந்தைகளுக்கு 3 வயது முதல் 12 வரை 1/16 தோலா.

12 வயதுக்கு மேற்பட்ட நபருக்கு 1/4 தோலா.

—டாக்டர் கிருஷ்ணமூர்த்தி L.I.M

ASOKA SCENTED BETELNUT POWDER

ராஜரிஷி

●

ஆதிகாலத்தில் இஸிதரன் என்ற ஒரு அரசன் தனக்கு இந்திரனுக்கொப்பான மகன் வேண்டுமென்று தவஞ் செய்தான். இவன் இவ்வாறு தவமியற்றும் தகவல் கிடைத்தவுடன் இந்திரன் தனக்கிடாக மற்றொருவன் பிறக்கக் கூடாதென்று அக்கறை கொண்டு தானே அவ்வரசருக்கு மகனைப் பிறந்துவிடலாமென்று முடிவு செய்தான். அம்முடிவுப் பிரகாரம் அந்த அரசருக்கு விசுவாமித்திரர் என்ற பெயருடன் மகனாக ஜனித்தான்.

விசுவாமித்திரர் பராக்கிரமம் படைத்தவராயும் பொது நலத்தில் மிகவும் அக்கறை கொண்டவருமான ஒரு லட்சிய அரசராக விளங்கினார். இவர் ஆட்சியில் ராஜ்யம் சீரும் சிறப்பு முற்றிருந்தது. நீதி தவருதவராதலால் மக்கள் அனைவரும் இவரிடம் மிகவும் மதிப்பும் அன்பும்கொண்டுமிருந்தனர். ஏழைகளுக்குத் தேவையான பொருள்களையும் வழங்கினதோடு எவருக்கு எந்தவிதமான உதவி தேவையானாலும் அளிக்கச் சித்தமாயிருந்தார் விசுவாமித்திரர்.

ஒருதினம் விசுவாமித்திரர் வேட்டையாடுவதற்காகவனத்திற்கு சென்று அங்கு தாகத்தால் நாவறண்டு வசிஷ்டரின் ஆஸ்ரமத்தை அணுகினார்.

அங்கு வசிஷ்ட மகரிஷி விசுவாமித்திரருக்களித்த உபசாரம் ஒரு மிகப்பெரிய அரசனாலும் அளித்திருக்க முடியாது. இதைக் கண்டு அதிசயித்த விசுவாமித்திரர் ஒருகணத்தில் இவ்வளவு விசேஷ உபசாரமளிக்கும் சக்தியை இவர் எப்படி பெற்றாரென்பதை விசாரித்ததில் மகரிஷியிடம் காமதேனு என்று தெய்விகச் சக்தி பெற்ற பசு ஒன்று இருந்ததென்பதையறிந்தார். அந்தப் பசுவை எவ்விதமாவது தான் அடையவேண்டுமென்று பேராசை கொண்டார்.

முதன் முதலில் வசிஷ்டரிடம் கெஞ்சிக் கேட்டார். அரசன் அரண்மனையில் விளங்கவேண்டிய ஒரு பொருள் ஒரு மகரிஷியின் ஆஸ்ரமத்திலிருப்பது நியாயம்தானா என்று மேலும் கேட்டுக் கொண்டார்.

இதற்கு வசிஷ்டர் தன்னுடைய விரதம், தவம், உபசார சக்தி முதலிய எல்லாவற்றின் ரகசியமும் காமதேனுவிலே யடங்கியுள்ளதால் அதைக் கொடுக்க முடியாதென்று கண்டிப்பாய்க் கூறினார், நயமான வழியில் பசு கிட்டாதென்று தெரிந்தவுடன் பலாத்காரமாக பசுவைப் பெறத் தீர்மானித்தார் விசுவாமித்திரர். விசுவாமித்திரருக்கும் வசிஷ்டருக்கும் மிகக் கோரமான யுத்தம் நடந்தது.

தனதுயஜமானரின் நிலையைக்கண்டு பரிதாபங்கொண்டகாமதேனு அவருக்கு உதவியாக பல வீரர்களைச் சிருஷ்டி செய்து விசுவாமித்திரரைத் தோற்கடித்தது. வசிஷ்டர் போன்ற ஒரு மகரிஷியிடம் போர் புரிவதற்குத் தானும் மகத்தான சக்திகளைப் பெற வேண்டுமென்ற முடிவிற்கு வந்துவிட்டார். யுத்தத்தில் தோல்வியடைந்த விசுவாமித்திரர் தன் ராஜ்ய விவகாரங்களையெல்லாம் தன் புத்திரனிடம் ஒப்படைத்து விட்டு தவம் புரியச் சென்றார். கோர தவம் புரிந்து பெற்ற சக்திகளெல்லாம் வசிஷ்டருடைய பிரம்ம தண்டத்திற்கு இணையல்லவென்று தெரிந்தது. திடீரென விசுவாமித்திரருக்கு இதன் காரணம் புலனாயிற்று. தான் ஒரு க்ஷத்திரியன்; வசிஷ்டர் பிரம்மரிஷி: தானும் பிரம்ம பதவியைப் பெற்றால் தான் வசிஷ்டருக்கு இணையான சக்தி பெறமுடியுமென்பதை உணர்ந்தார். விசுவாமித்திரர் பிரம்ம பதவியை யடைவதற்குப் புரிந்த கடுந்தவத்தைப் பற்றியும் அவருக்கு நேரிட்ட துன்பங்களைப் பற்றியும் வால்மீகி ராமாயணத்தில் பல தகவல்களிருக்கின்றன. தெற்குத் திசைக்குச் சென்று ஆயிரம் ஆண்டுகள் தவம் புரிந்ததற்குப் பிறகு பிரம்மதேவன் விசுவாமித்திரருக்கு முன்பு தோன்றி இன்னும் அநேகாயிரம் ஆண்டுகள் தவமியற்றினால்தான் பிரம்ம பதவி கிட்டும் என்று கூறி மறைந்தார்.

பிரம்மாவின் வார்த்தைகளைக் கேட்டு விசுவாமித்திரர் கடுங்கோபமடைந்து மறுபடி தன் தவத்தைத் தொடங்கினார். அப்பொழுதுதான் திரிசங்கு மகாராஜனுக்கு விசுவாமித்திரர் உதவி புரிய நேரிட்டது. திரிசங்கு மகாராஜனுக்காக விசுவாமித்திரர் தனி உலகைக் கூடச் சிருஷ்டித்தாராம்.

இம்மாதிரிச் செயல்களில், தான் தவம் புரிவதன் மூலகாரணத்தைச் சற்று மறந்துவிட்டார். மறுபடி ஞாபகம் வந்ததும் மேற்குத் திசைக்குச் சென்று தன் கடுந்தவத்தை மீண்டும் தொடங்கினார். தேவர்கள் மேனகையை அனுப்பி வைத்து 'அவர் தவத்தைக் கலைக்க முயன்றார்கள். அதனால் அவர் வடதிசைக்குச் சென்று தவம் புரியச் சென்றார். அங்கும் இடைஞ்சல்கள் ஏற்பட்டதால் கிழக்குத் திசைக்குச் சென்றார். அங்கும் ஆயிரக்கணக்கான வருஷங்கள் கடுந்தவம் புரிந்தார். பிரம்மா இங்கே தோன்றி அவருக்குப் பிரம்ம ரிஷி பட்டத்தை யளித்தார்.

ஆனால் விசுவாமித்திரர் இதனால் திருப்தியடையவில்லை. வசிஷ்டரே தன்னைப் பிரம்மரிஷியென அழைக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். அதன் பிரகாரம் வசிஷ்டரே விசுவாமித்திரரைப் பிரம்ம ரிஷி என்று அழைத்த பின்பு இருவரும் அன்யோன்யமாயினர். ஒருசமயம் தர்மதேவதை விசுவாமித்திரரை சோதிப்பதற்காக வசிஷ்டர் ரூபத்தில் தோன்றி அவரை அன்னம் கேட்டது. அந்தச் சமயம் விசுவாமித்திரரின் ஆஸ்ரமத்தில் அன்னம் தயாராக இல்லாததால் விசுவாமித்திரர் அதிதியைச் சற்று காத்திருக்

கும்படி சொன்னர். ஆனல் தர்மதேவதை காத்திருக்க முடியா தென்று கூறி மறைந்துவிட்டது அத்தருணத்தில், தான் நின்று கொண்டிருந்த அதே இடத்தில் அதற்குப் பிரயாச்சித்தமாக நூறு வருஷங்கள் தவம் புரிந்தார். முடிவில் வசிஷ்டரே விசுவா மித்திரர் முன்பு தோன்றி அவரைப் பிரம்ம ரிஷி யென்றழைத்தார்.

வசிஷ்டர் மீதுள்ள கோபத்தினல் விசுவர்மித்திரர் அரிச்சந்தி ரனை எவ்வாறு பாடுபடுத்தினரென்பதை அனைவரும் அறிந்ததே. விசுவாமித்திரர் வாழ்க்கையில் அடைந்த ஒரு முக்கிய தோல்வி யாகும் ஹரிச்சந்திரன் சத்தியத்தைத் தவருமல் காப்பாற்றி யது.

விசுவாமித்திரருக்குத் தாடகையிருந்த வனத்திலும் சரஸ்வதி நதி தீரத்திலும் குருக்ஷேத்திரத்திலும், கௌசிகா நதி தீரத்திலும் ஆஸ்ரமங்களிருந்தன. விசுவாமித்திரருக்கு நூறு புத்திரர்களிருந் தனர். இவர்களில் ஐம்பது பிள்ளைகள்தான் இவரை மிகப் பெரிய ரிஷி யென ஒப்புக்கொண்டனர். மற்ற ஐம்பது பேர் அப்படி ஒப்புக் கொள்ளவில்லை.

ரிக் வேதத்தில் ஒரு மண்டலம் பூராவும் விசுவாமித்திரராலும் அவருடைய புதல்வர்களாலும் இயற்றப்பட்டதாம். ராமன்மீது விசுவாமித்திருடைய அன்பையும் ஆதரவையும்தான் ராமாயணத் தில் காண்கிருேம். ராம லக்ஷ்மணர்களைச் சீடர்களாக்கொண்டு அவர்களுக்கு மணத்தையும் முடித்துவிட்டு ராமபிரானின் பெரு மையையும் உலகத்திற்குக் காட்டிவிட்டுவிசுவாமித்திரர்மறைகிருர்.

விசுவாமித்திரர் என்ற பதத்திற்கு உலகத்தின் நண்பர் என்று அர்த்தம்.

T. A. V. Dikshitar in *B. U. J.*

மணிவிளக்கு ஏற்றுவோம்!

மணிவிளக்கு ஏற்றுவோம்
மணிவிளக்கு ஏற்றுவோம்
மனமகிழ்ந்து அருள் நிறைந்து
மாநிலம் மகிழ்பெற

★

எல்லையற்ற தொல்லையும்
ஏழை சாதி கொள்கையும்
இல்லையென்று சொல்லி நெஞ்சில்
இலட்சியத்தைக் கொள்ளவும் (மணி)

★

வெட்டியான பேச்சிலே
வேளை போக்கிடாமலே
திட்டமான செயலில் நித்தம்
ஜெயம் பெறவே அன்பிலே (மணி)

★

சங்கடங்கள் நீங்கவும்
தருமநிலை யோங்கவும்
மங்களமே தங்கி யென்றும்
வர்ழ்வில் இன்பங்கொஞ்சவும் (மணி)

★

கல்வி ஞானம் நிறையவும்
கபடு சூது மறையவும்
பல்விதமாம் கலைகளிந்தப்
பாரிலோங்கி வளரவும் (மணி)

அங்கமங்கலம் குப்பு

(உலகத்தில் 'நர்ஸிங்' தொழில் தோன்றக் காரணம்.)

லாந்தர் ஏந்திய மாது

ஆஸ்பத்திரி நர்ஸாக பணி புரிவதற்குப் பெண்கள்தான் தகுந்தவர்களென்ற அபிப்பிராயம் இன்று எங்கும் பரவியுள்ளது. ஒரு நூற்றுண்டுக்கு முன்பு ஸ்திரீகள் ஆஸ்பத்திரிகளுக்கு நர்ஸாகப் போவதென்பது எவரும் கேட்டிராத விஷயம். ஆஸ்பத்திரிகளில் உலகமெங்கும் இன்று நிலவியுள்ள நோயாளிகளைப் பராமரிக்கும் தொண்டு ஸ்திரீகள் புரியக் காரணம் ஒரு ஆங்கிலப் பெண்மணியாகும்.

Courtesy] [*Listener*, London.

இருளை நீக்கி ஒளியளித்த மங்கை

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) என்ற பெண் ஒரு ஆங்கிலப் பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அருமையாகப் பெற்று வளர்த்த இப்பெண்ணைத் தங்கள் அந்தஸ்திற்குத் தகுந்தவாறு மற்றொரு

குடும்ப வாலிபனொருவனுக்கு மணஞ்செய்து கொடுத்து குழந்தைகளை பெற்றெடுத்து சீரும் சிறப்புடனும் வாழ்வாள் என்று எதிர்பார்த்தனர். இந்த நோக்கத்துடன் அவளுக்கு கல்வியளித்து சமூக வைபவங்களில் கலந்து கொள்ள பயிற்சி செய்ததன்மூலம் பிரபுக் குடும்ப வாலிபர்களைச் சந்தித்து அவர்களுடன் பழகி அவளுக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் சந்தர்ப்பமுமளித்தார்கள்.

ஆனால் தன் பெற்றோர்கள் கருத்துக்கு விரோதமாகச் செல்வந்த வாலிபர்கள ஈடுபடும் கேளிக்கைகளிலும் வைபவங்களிலும் இவள் மனம் ஈடுபடவில்லை.

நோயாளிகளின் பரிதாப நிலையைப் பற்றி இவள் சதா மிகவும் கவலை கொண்டிருந்தாள். இளம் பிராயத்தில் பொம்மை விளையாட்டில் ஈடுபடும் போதுகூட பொம்மையை நோயாளியாகவும் தன்னைத் தொண்டு புரியும் நர்ஸாகவும் பாவித்தே விளையாடுவாள்.

பிரத்தியேகமாக, அக்காலத்தில் நடந்த கிரிமியா யுத்தத்தில் ஈடுபட்டு காயம்பட்ட சிப்பாய்கள், வேறு நோய்களால் பீடிக்கப்பட்ட சிப்பாய்கள் முதலியோருடைய நிலையைப்பற்றி மிகவும் இரக்கங்கொண்டாள். அவர் களுடைய நிலைமையை எவ்விதமாவது சீர்திருத்த வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டாள்.

ஒரு நூற்றுண்டுக்கு முன்பு 'நர்ஸிங்' வேலைக்கு வயதான ஸ்திரீகள் மாத்திரமே சென்றுகொண்டிருந்தனர். இவர்கள் அநேகரும் குடிப் பழக்க முடையவர்கள். இந்தத் தொழிலுக்குத் தேவையான பயிற்சியோ, படிப்போ பெருதவர்கள். அதனுல் நோயாளிகளுக்கு இவர்களால் திருப்திகரமான சேவைபுரிய இயலாமலிருந்தது.

யுத்தத்திற்குச் செல்லும் சிப்பாய்களுக்குக் காயம் பாட்டலோ அல்லது மற்ற ஏதாவது நோய்களால் பாதிக்கப்பட்டாலோ அவர்களைச் சிசுருஷிப் பதற்குத் தேவையான ஆட்களுமில்லை. கிடைக்கும் ஆட்களுக்கு சேவைக் குத் தகுந்த பயிற்சியுமில்லை.

போதுமான சலுகைகளை யளித்து தங்கள் தொழிலில் அக்கறை கொள் வதற்கான ஏற்பாடும் அந்தக் காலத்தில் கிடையாது. இதையெல்லாம் சிந்தித் துப் பார்த்து பிளாரன்ஸ் தினந்தோறும் கண்ணீர் விட்டுக்கொண்டிருந் தாள்.

செல்வச் செருக்குடன் வாழ்ந்த குடும்பத்தில் உதித்த யுவதிக்கும் அரு வருப்பும் அருவையுமளிக்கும் நோயாளிகள் சேவைக்கும் எத்தனை தூரம்! ஆனால் இந்த சேவையில் ஈடுபடவேண்டி ஆண்டவனே நான்கு முறைகள் தோன்றி பிளாரன்ஸிற்கு கட்டளையிட்டாராம். வாழ்க்கையில் மிகப் பெரிய சாதனைகளைச் சாதித்துள்ள அனைவரும் ஆண்டவனே தான் அந்த அரிய பெரிய சாதனைகளைப் புரியத் தேர்ந்தெடுத்துள்ளாரென்று நினைப்பதும் கூறுவதும் வழக்கம்.

இம்மாதிரியான ஒரு ஆர்வம் இவள் கொண்டதால் தான் அக்காலத் தில் ஈனம் என்று கருதப்பட்ட இத்தொழிலில் இவள் ஈடுபட்டதற்குக் காரணம். பெற்றோர்களின் தீவிர எதிர்ப்பு; சர்க்காரின் சகஜமான அசிரத்தை, பொதுமக்கள் அக்காலத்தில் நர்ஸ்களைப்பற்றிக் கொண்டிருந்த விரோத மனப்பான்மை இவையொன்றையும் சட்டை செய்யாமல் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் லண்டனிலுள்ள சிலஆஸ்பத்திரிகளுக்குச்சென்று நோயாளிகளைப் பராமரிக்கும் பணிகளில் பயிற்சி பெற்றுள்.

பிறகு கிரிமியாவில் யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது அங்குள்ள ஸ்குடாரி என்ற நகரத்திற்கு ஒரு சிறு ஸ்திரீ படையுடன் சென்றுள். பிளாரன்சின் குடும்பம் இங்கிலாந்தில் ஆட்சி புரிந்துவந்த மந்திரி குடும்பங்களுக்கெல்லாம் மிகவும் பரிச்சயமானது. அதனுல் கிரிமியாவில் யுத்தம் செய்து வந்த பிரிட்டிஷ் ராணுவ தளபதிக்கும் மற்ற ராணுவ அதிகாரிகளுக்கும் பிளாரன்ஸைப் பற்றி மிகப் பயமும் அவள் கிரிமியாவிற்குச்சென்ற நோக்கத்தைப் பற்றியும் மிகவும் அருவருப்புக் கொண்டிருந்தார்கள்.

இவள் சொற்படி நடக்கவும், நடந்துகொள்ளாமலிருக்கவும் இவர்களுக்குப் பயம். அதனுல் தங்கள் தொழிலில் இவள் தலையிடுவதைப்பற்றி ஆத்திரமடைந்தார்கள்.

யுத்தத்தில் காயமடைந்தவர்களையும், நோயால் பீடிக்கப்பட்டவர்களையும் போதுமான அளவிற்குப் பரமாரிப்பதுண்டென்பது இவர்களது அபிப்பிராயம். ஆனுல் பராமரிப்பவர்களுக்குப் பயிற்சியளிக்காததனுலும், பராமரிப்பவர்கள் முழு மனத்துடன் தங்கள் தொழிலில் ஈடுபடாததாலும், தங்கள் தொழிலுக்குப் போதுமான அளவு பயன் கிட்டாததாலும் தான் நோயாளிகளனைவரும் மாண்டு கொண்டிருந்தார்களென்பது பிளாரன்சின் அபிப்பிராயம்.

இதையெல்லாந் தவிர நோயாளிகளுக்குப் போதுமான வசதிகளும் ராணுவத்தில் இல்லையென்பது பிளாரன்சிற்கு நன்கு தெரிந்தது. இந்த ஒரு விஷயத்தில் சீர்திருத்தம் செய்வதற்கு மிகவும் பாடுபட்டாள். கிரிமியாவிற்குச் சென்றபின் காயம்பட்ட சிப்பாய்கள் யுத்த களத்துக்கருகேயுள்ள ஆஸ்பத்திரிகளில் அனுபவிக்கும் மரண வேதனையெல்லாம் பிளாரன்சிற்குத் தன் கண்ணுலேயே காணச் சந்தர்ப்பங் கிடைத்தது.

இரவும் பகலும் வேதனை பொறுக்க முடியாமல் "ஐயோ, ஐயோ" வென்று ஓலமிட்டாலும் எவராலும் கவனிக்கப்படாமல் சிப்பாய்கள் படுக்கையில் கிடந்து அவதிப்பட்டு வந்தார்கள். படுக்கைகளிலெல்லாம் ரத்தம், மல ஜலம் முதலியவற்ருல் அசுத்தம் நிறைந்திருந்தன. மூட்டைப் பூச்சிகள், பேன்கள், புழுக்கள் முதலியவற்ருல் நிறைந்திருந்தனநோயாளிகளின் படுக்கைகள்.

பிளாரன்ஸ் கிரிமியாவிற்குச் செல்லும்போது நோயாளிகளுக்குத் தேவையான படுக்கைகள், போர்வைகள், மருந்துகள் முதலியவற்றை ஏராளமாகக் கொண்டு போயிருந்தாள். இவை யாவையும் ஸ்குடாரி ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளிகளுக்கெல்லாம் விநியோகித்து நோயாளிகளைச் சூழ்ந்திருந்த துர்க்கந்தங்களை அகற்றினுள். கிரிமியாவிலுள்ள பிரிட்டிஷ் தளபதி, பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கடிதங்களெழுதி தேவையான சாமான்களைத் தருவிப்பதற்கும் மிகச் சிரமப்பட்டு ஏற்பாடு செய்தாள்.

தளபதியிடம் விஷயத்தைக் கூறி அவரை லண்டனிலுள்ள பிரிட்டிஷ் ராணுவ இலாகாவிற்கு கடிதமெழுத வைப்பது ஒரு பிரம்மப்பிரயத்தனம், தளபதியின் கடிதப்படி தேவையான சாமான்களை லண்டன் ராணுவ இலாகா அதிகாரிகளை அனுப்பவைப்பது ஒருபகீரதப்பிரயத்தனம். பிரிட்டிஷ் சர்க்கார் மந்திரிகளனைவரும் பிளாரன்சின் குடும்ப நண்பர்களாதலால் இவள் சுவாதீனத்தோடு தனக்குத் தேவையான பொருள்களுக்காக மந்திரிகளுக்குக் கூறியும் வற்புறுத்தியும் கடிதங்களெழுதி காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் திறமையும், வசதியுமிருந்தது.

காலப்போக்கில் பிளாரன்சின் தன்னலமற்ற முயற்சியின் பலனுக ராணுவ நோயாளிகளின் நிலைமை சீரடைந்து. நர்ஸுகளுக்குப் பயிற்

யளிக்கும் வசதிகள் ஆஸ்பத்திரிகளில் அளிக்கப்பட்டன. இவர்கள் படிப்புக்கென்று பிரத்தியேக ஸ்தாபனங்கள் ஏற்பட்டன.

பிளாரன்சின் முயற்சி மூலம் நர்ஸுகளுக்கு அவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியமும் தேவையான மற்ற சலுகைகளும் சர்க்கார் அளித்தனர்.

நர்சுகளுக்கு ஜாகை வசதிகள், மற்ற பொழுதுபோக்கு வசதிகள், வாசகசாலைகள் முதலியவையெல்லாம் கிடைக்கலாயின. இதனால் தங்கள் தொழில் வெகு இழிவானது, ஏதோ செய்யவேண்டியிருக்கிறதே என்ற மனப்பான்மை மாறி தங்கள் தொழிலும் ஒரு மதிப்பு வாய்ந்த தொழில், வேறு எந்தத் தொழிலுக்குமிருக்கும் வசதிகள் இதிலுமுண்டென்ற மகிழ்ச்சியைப்பெற்று நோயாளிகளை மிகவும் அக்கறையோடும், கனிவுடனும் கவனிக்கும் மனப்பான்மை நர்ஸுகளனைவருக்கும் ஏற்பட்டது.

கிரிமியா யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது அங்குள்ள ராணுவ ஆஸ்பத்திரியிலிருந்த நோயாளிகளுக்கெல்லாம் இரவில் ஒரு கனவு தோன்றுவது வழக்கமாயிருந்தது. நடுநிசியாகியும் நித்திரையில்லாமல் வேதனையுற்றுக்கிடக்கும் நோயாளிகள் முன்பு கையில் லாந்தருடன் ஒரு ஸ்திரீ தோன்றுவாளாம். நித்திரையில்லாதவர்களிடமெல்லாம் விஷயமென்னவென்டதை விசாரித்து அவர்களுக்குத் தேவையான சிசுருஷைகளைச் செய்து அவர்கள் படும் வேதனைக்குச் சற்று ஆறுதலளித்துச் செல்வது இவளுடைய நித்தியப் பழக்கமாயிருந்தது. இதனால் இவளுக்கு "லாந்தர் ஏந்திய மாது" என்ற பெயரையும் நோயாளிகள் சூட்டிவிட்டார்கள்.

நோய் என்ற இருளால் நிறைந்துள்ள ஆஸ்பத்திரி வாசிகளின் வாழ்க்கையில் கனிவு, ஆறுதல் என்ற ஜோதியைப் பரப்பி வந்த பிளாரன்ஸ் நைட்டிங்கேலுக்கு "லாந்தர் ஏந்திய மாது" என்ற பெயர் எவ்வளவு பொருத்தமானது!

—*Listener*, London

பயங்கர விருந்தாளி!

ராஞ்சி நகரவாசி ஒருவர் ஒருதினம் அதிகாலையில் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்தார். கால் முதல் தலை வரை கம்பளிப்போர்வையால் மூடிக்கொண்டு நித்திரையில் ஆழ்ந்திருந்த இவருக்குத் தன் முகத்தை எவரோ பலமாகத் தடவுவதுபோல் தோன்றியது. போர்வையை நீக்கிக் கண்ணை விழித்துப் பார்த்தபோது அவர் கண்டது ஒரு சிறுத்தை! இதன் பயங்கர உருவத்தைக் கண்டதும் பீதியுடன் தான் என்ன செய்கிறோம் என்று தெரியாமலே தன் போர்வையைச் சிறுத்தை மீது விட்டெறிந்துவிட்டு வெளியே ஓடி "ஐயோ ஐயோ"! என்று கூச்சலிட்டார். அக்கம் பக்கத்தில் கூடியவர்களிடையே அதிருஷ்டவசமாகத் துப்பாக்கியுள்ளவரும் ஒருவர் இருந்தார். இவர் சிறுத்தையைச் சுட்டுக் கொன்றார்.

ராஞ்சி நகருக்கருகே காடுகளேயில்லாவிடினும் இந்தச் சிறுத்தை நகரத்திற்குள் எவ்வாறு புகுந்ததென்று புரியவில்லை.

Indian Nation, Patna

ஏமாற்றம்

★

என்னுடைய ஆப்த நண்பரொருவன் எனக்கொரு அரிய ஆலோசனை கூறினன். அதிலேவொன்றுமில்லை இதுதான். 'அதாவது தெருவிலே நடந்து செல்பவர்கள் அல்லது பஸ்ஸில் நின்று பிரயாணம் செய்பவர்கள், வேலை அங்கே காலியிருக்கு இங்கே காலியிருக்கு என்று பேசுவார்கள். நீ அவர்களுக்கு முன் அங்கு ஆஜாரகிவிடு.'

மறு நாளிலிருந்து என்னுடைய ஸி. ஐ. டி. படலம் ஆரம்பமாயிற்று. மரீனு பீச்சில் சுற்றினேன், மவுண்ரோட்டிலே அலேந்தேன், சைனுபஜாரில் திரியாத்திரிந்தேன். ஆனல் உலக அரசியல் முதல், அதாவது "பாண்டுங்" மகாநாடு முதல், குடும்பவிஷயம்வரை (கணவன் மனைவித் தகராறு) அடிபட்டதே தவிர, வேலையைப் பற்றி யாரும் பேசுவதாகத் தெரியவில்லை.

அன்று சைனுபஜாரில் போய்க் கொண்டிருந்தேன். மணி பதினென்றுக்கு மேலிருக்கும். வெயிலின் கொடுமை உச்ச நிலையையடைந்திருந்தது. வேர்வையோ குத்தாலம் அருவியாகத் தலையிலிருந்து காலில் விழுந்து கொண்டிருந்தது. கிழிந்துபோன செருப்புடன் கால்கள் போராடிக்கொண்டிருந்தன. ஆனல் இவையெல்லாம் நான் கவனிக்கவேயில்லை. என்னுடைய, உடல், ஆவி, மனம், எல்லாவற்றையும் கவர்ந்திருந்தது எனக்கு முன் சென்ற இரு நண்பர்களுடைய சம்பாஷணை. இதற்காகவல்லவோ நான் தவங்கிடந்து சுற்றுகிறேன், இந்தப் பாழாய்ப்போன வெய்யிலில்.

"டேய், பழி, நான் சொன்ன விஷயம் என்னடா ஆயிற்று?"

'எதுடா'

'எதைப் பற்றித் தாண்டாயிருக்கும். எல்லாம் அந்தப் பாழாய்ப் போன வேலையைப் பற்றித்தான்'

'அடாடா, இப்பத்தான் ஞாபகம் வறது'

'சரிதாண்டா, புத்தருக்கு மரத்தடியில் ஞாபகம் வந்ததாம், உனக்கு பட்டணத்தின் வெய்யிலில் உண்டாகிறதாக்கும், சரி, சரி, என்ன விஷயம் சொல்லுடா.'

இது ஏதடா சனியன், சிவபூஜையில் கரடி புகுந்தாப்போல குறுக்கே விழுறன். இந்தச் சமயம் பார்த்து ஒரு மாம்பழக்காரன் உரத்த குரலில், காதைச் செவிடாக்கும்படி, கத்திக்கொண்டே எனக்கும் அவர்களுக்குமிடையில் சென்றுன்.

ஆனல்நானுவிடுபவன்,முண்டியடித்துக்கொண்டே அவர்களுக்கருகில் செல்ல எத்தனித்தேன். அவர்கள் கடைசியில் சொன்னது அரை குறையாகத்தான் காதில் விழுந்தது, என்றுலும் ஒன்றுமில்லாததற்கு அரை குறையும் மேலல்லவா.

மறுநாள் சுமார் பன்னிரண்டு மணிக்கு அவர்கள் கூறின இடத்தைக் கண்டுபிடிக்க கச்சைக் கட்டிக்கொண்டுக் கிளம்பினேன். ஒன்று பிராட்வேயில் 13 ஆம் நம்பரில் இருந்தது. படை படைக்கும் வெயிலில் பிராட்வேயில் [பேருக்குத்தான் பிராட்வே]சுற்றியலேந்து அந்த நம்பரைக் கண்டுபிடித்தேன்.

அதைப் பார்த்ததும் எனக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

அவ்விடத்தில் கம்பெனியும் இல்லை ஆபீஸும் இல்லை. அது ஒரு வெறும் பாழடைந்த கட்டிடந்தான். அதை ஒரு சில பாதையோர வாசிகள் தங்கள் வீடாக சுவீகரித்துக் கொண்டிருந்தார்கள்.

எனக்கு ஒரே களைப்பாக இருந்தது. அங்கேயே நிற்கவும் எனக்கு மனம் வரவில்லை. தள்ளாடிக் கொண்டே அவர்கள் சொன்ன இரண்டாவது விலாசத்தைத்தேட ஆயத்தம் செய்தேன். அது அரண்மனைக்காரன் தெருவில் இருந்தது. அவர்கள் நூற்றுப்பதினொன்று என்று சொன்னார்களா அல்லது நூற்றுப்பதிமூன்று என்று எனக்குச்சந்தேகம். இருந்தும் இரண்டையும் பார்த்து விடுவது என்று கங்கணங்கட்டிக் கொண்டேன்.

நூற்றிப்பதினொன்றும் நம்பர் ஒரு டீக்கடை. அதுவும் அன்று விடுமுறை நாள். எனக்கிருந்த களைப்பில், அது திறந்திருந்தால் ஒரு கப் "ஸ்ட்ராங்" டீயாவது குடித்திருப்பேன்.

இரண்டாவது, அதாவது நூற்றிப்பதிமூன்றும் நம்பர், ஒரு மாஜி கிடங்கு. இப்பொழுது ஸ்ரீமான்கள் எலிகளின் அரண்மனை. மேலே ஒரு பாதியழிந்து "டூலெட்" போர்டு தொங்கிக் கொண்டிருந்தது, இல்லை, இல்லை, அறுந்து விழுவதற்கு நேரம் பார்த்துக்கொண்டிருந்தது.

என் மனம் என்ன நிலையிலிருந்திருக்குமென்று நீங்களே யூகித்துக் கொள்ளலாம். எனக்கு யோசனை கூறிய நண்பர்களையும், அந்த இரு நண்பர்களையும் சபித்துக்கொண்டே, தலைவிதியே என்று ஹைக்கோர்ட்டு பக்கமாக நடையைக்கட்டினேன்.

ஆனல் எனக்கு அங்கும் ஒரு இடி காத்துக்கொண்டிருந்தது. நம்முடைய பழைய நண்பர்கள் (அது தான் வேலையைப் பற்றிப் பேசினவர்கள்) எனக்கு முன்னல் சென்றுகொண்டிருந்தார்கள். விட்டேனு பார்! என்று நானும் பின் தொடர்ந்தேன். வேலையில்லாத பேர்வழி சத்தம் போட்டுக் கொண்டிருந்தான்.

'டேய், என்னடா, என்னைப் பயித்தியம் என்று நினைத்துக் கொண்டாயா"

'இல்லையடா, நான் சொல்வதைக் கேளடா'

'போதுமடா, நீ சொன்னதைக் கேட்டதும் போதும், வெய்யிலில் சுத்தியலைந்ததும் போதும்.'

'நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, அப்புறம் 'என்னவேணுமானலும் சொல்லிக்கொள்ளடா'

'சரி, சரி, அதையுந்தான் சொல்லி வை.'

'உன்னிடத்தில் ஒரு டயரி கொடுத்தேனே அதைப் பார்த்தாயா?'

'என்னடா, கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் முடிச்சுப் போடறே.

'முந்திரிக் கொட்டை மாதிரி அவசரப்படாதேடா. உண்மை விலாசம் அதில் தாண்டா எழுதி வைத்திருக்கிறேன்.'

'அட பாவி, பின் எதுக்கடா இவ்வாறு பொய் விலாசத்தைக் கூறினய், உன் நண்பன் வெயிலில் சுத்தி "ஸன்ஸ்ட்ரோக்" வந்து சாகட்டும் என்ன?"

'உனக்கு தெரியாது விஷயம். இன்று சிலரிடம் (வேலையில்லாதவரிடம்) ஒரு பழக்கம் இருக்கிறது, அதுதான் மற்றவர்கள் பேசுவதை ஒற்றுக்கேட்டுப் பிறகு அங்கு அவர்கள் முதலில் செல்வது. அவர்களிடமிருந்து காப்பதற்குத்தான் அந்தப் பொய் நாளைக்கு அந்த உண்மை விலாசத்திற்கு நிச்சயம் போய்ச் சேரு.

எனக்குத் தலையைச் சுற்றியது. பக்கத்திலிருந்த ஒரு விளக்குக் கம்பத்தை பிடித்துக்கொண்டு சாய்ந்தேன் மூச்சற்று.

"எஸ்கே"

ஆண்டவனே காட்டிக் கொடுத்தார்!

தாரா, பஸல்டின் என்ற இரு முகமதியர்கள் டில்லியில் ஒரு மணிக் கூண்டருகே லால் சந்த் என்ற ஹிந்துவைச் சந்தித்தார்கள். தாரா என்பவன் லால்சந்தினிடம் "நீ பகவான் இருக்கிறார் என்பதை நம்புகிறாயா?" என்று கேட்டான். "ஆம் எனக்கு நம்பிக்கையுண்டு என்று லால் சந்த் பதில் கூறினான். பஸல்டின்னிடமும் தாரா இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு அவனும் அவ்வாறே பதில் கூறினான்.

உடனே தாரா, பஸல்டின்னிடம் "நீ உன் சட்டையை என்னிடம் கொடுத்து பின் பக்கம் திரும்பாமல் பத்தடி நடக்க வேண்டும்" என்று கூறினான். அவ்வாறே பஸல்டின் தன் சட்டையை தாராவிடம் கொடுத்துவிட்டு பத்தடி நடந்தான்.

பிறகு பரபரப்பாக ஓடோடியும் வந்து "நான் பகவானைக் கண்டுவிட்டேன், ஆஹா, என்ன ஆனந்தம்! என்ன அழகு!" என்றெல்லாம் விவரித்தான். பிறகு தாரா லால்சந்தினிடம் "நீயும் உன் சட்டையைஎன்னிடம்தந்துவிட்டு பத்தடி தூரம் நடந்தால் நீயும் பகவானைக் காணலாம்" என்று கூறியதுதான் தாமதம், உடனே தன் பவுண்டன் பேனா, பணம், வேறு சில பொருள்களிருந்த சட்டையை தாராவிடம் கொடுத்துவிட்டு பத்தடி நடந்தான்.

லால்சந்த், பகவான் தன் கண்ணுக்குத் தோன்றினரோ இல்லையோ என்று தீர்மானிப்பதற்குமுன்பே தாராவும் பஸல்டினும் தன் சட்டையுடன் நழுவிவிட்டார்களென்று தெரிய வந்தது. பகவானைப் பார்க்கலாமென்று மகிழ்ச்சி கொண்ட லால்சந்த் இந்தஇரு முகம்மதியர்களையும் தேடத் தொடங்கினன். முடிவில் போலீஸாரிடம் இதைப் பற்றி வழக்கு பதிவு செய்தது மூலம் இவனுடைய சட்டை திரும்பக் கிடைத்தது.

Hindustan Times, New Delhi

அசலும் நகலும்!

இப்ராஹீம் இப்னு அத்ஹம் அரசு துறந்த பிறகும், சிற்சில சமயங்களில் பணியாட்கள் புடைசூழ ஆடம்பரமாகப் பிரயாணம் செய்வார்கள். அவர்கள் தங்கும் கூடாரங்கள் தங்கமுளைகளால் அடிக்கப்பட்டிருக்கும்.

ஒருதடவை ஸூபியொருவர் அக் கூடாரங்களின் வழியே போக நேர்ந்தது. அரசு துறந்த ஆத்மஞானியொருவர் இத்தகைய ஆடம்பரப்பொருட்களை வைத்திருப்பதைக் கண்ட அவர் பெரிதும் ஆச்சரியப்பட்டார். பிச்சைப் பாத்திரத்துடன் அவர்களை அணுகி நீங்கள் ஸூபி எனக் கூறிக்கொண்டு இவ்வளவு உல்லாசப் பொருள்களை வைத்துக்கொண்டு கூடாரமடிக்க தங்க முளைகளை உபயோகித்துக் கொண்டுமிருப்பது விநோதமல்லவா?'' என்று வினவினர்.

அரசதுறவி இப்ராஹீம் இப்னு அத்ஹம் உடனே பதில் தரவில்லை. தம்முடன் இருத்தி உபசாரம் செய்து அவரை தம்முடன் மக்காவுக்கு வரும்படி அழைத்தார்கள். அவரும் இசைந்தார். அந்த உயர்ந்த பொருள்களையும், பணியாட்களையும் அப்படியே விட்டு விட்டு மக்காவுக்குக் கிளம்பினர்கள்.

சிறிது தூரம் சென்றதும் தம் மரக்கோப்பையை கூடாரத்தில் மறந்து வைத்துவிட்டு வந்தது புதிய மனிதருக்கு நினைவு வந்தது. உடனே திரும்பிப் போய் அதை எடுத்து வர அரச துறவியிடம் அனுமதி கேட்டார்.

“நம்மிருவரிடையேயுள்ள வேற்றுமை இதுதான்! என்னுடைய மதிப்புயர்ந்த பொருள்களை யெல்லாம் துறந்து உங்களுடன் வந்தும், அவற்றிற்காக வருத்தப்படாமலிருக்க என்னால் முடிகிறது. ஆனால் உங்களுடைய உடைமையான ஓர் அற்பகோப்பையை விட்டுவிட்டு வர உங்களால் முடியவில்லை. உங்கள் ஆச்சரியத்திற்குக் காரணமான அந்த தங்க முளைகளை மண்ணிலே ஊன்றினேனே யொழிய என் மனத்திலே அவற்றை ஊன்றவில்லை'' என்று அமைதியாகப் பதிலளித்தார்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம்.

—மணிவிளக்கு



ஜகத்வீர ராஜகுமார எட்டப்ப மகாராஜா

★

இவர் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ், ஸங்கீதம் ஆகியவற்றில் நல்ல பயிற்சியையுடையவரும், தர்மசீலருமாகிய வேங்கடேசுவர எட்டப்ப மகாராஜரின் மூத்த புதல்வர். காவ்ய, நாடக, அலங்காராதி வித்யைகளில் பண்டிதர். ஆறு சாஸ்திரப் பண்புகள் தெரிந்த உத்தமர். ஸங்கீத லக்ஷ்ய, லக்ஷணங்கள் நன்றாக அறிந்த வைணிக உத்தமர். தெலுங்கு, தமிழ் ஆகிய பாஷைகளில் வித்வான். ஸ்ரீ கணபதி முதலிய தெய்வங்களின் விஷயமாக "ஸ்ரீ கார்த்திகேய" முத்திரையுடன் அனேக சூர்ணிகைகள், சுலோகங்கள், கீர்த்தனங்கள் இவற்றை பல ரக்திராக, தேசிய ராகங்களில் அழகிய கற்பனைகளுடன் இயற்றியிருக்கிறார்.

தம்முடைய ஸபையில் சதுச்சாஸ்த்திர பண்டிதரான வித்வான் ஸ்ரீரங்கம் குப்பையங்கார், அப்பைய தீக்ஷிதரின் வம்சஸ்தரான திருவாலங்காடு விசுவேச்வரி தீக்ஷிதர், மீமாம்ஸை முதலிய சாஸ்திரங்களில் விற்பன்னரான திருக்கோடிக்காவல் கோதண்டராம சாஸ்திரிகள், வியாகரண பண்டிதராகிய ஸ்ரீவல்லிபுத்தூர் வீரராகவதாதாச்சாரியார், தர்க்க சிரோமணியாகிய விட்லாபுரம் மன்னாரய்யங்கார், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, காமிகை முதலிய பதினெட்டு ஆகமங்கள் இவற்றில் பண்டிதராகிய கழுகுமலை அஹோபல சாஸ்திரிகள், இன்னும் அநேக சமஸ்கிருத வித்வான்கள், தெலுங்கு வியாகரண நிபுணராகிய விளாத்திகுளம் கிருஷ்ணயாமாத்யர், தெலுங்கு, தமிழ் இரண்டிலும் மகா கவியாகிய அவல்நத்தம் ராமலிங்கய்யா, தெலுங்கு பண்டிதர் பாலய்யா, கோபாலய்யா, தெலுங்கு கவிஞர் கேசவராஜு முதலிய ஏறுகளையும் கடிகைப்புலவர், மூக்குப்புலவர், அஷ்டாவதானி முத்துக்குமாரப்புலவர், பரமசிவப்புலவர், நமசிவாயப்புலவர், பாண்டியப்புலவர் முதலிய தமிழ்ப் புலவர்களையும், வாக்கேயகாரரும் வைணிக சிரேஷ்டருமாகிய பாலஸ்வாமி திக்ஷிதர், வைணிக குலோத்தமராகிய ஸுப்புகுட்டி அய்யா, இச்சமஸ்தானத்தில் பரம்பரை வைணிகரும் பாலஸ்வாமி தீக்ஷிதரின் சிஷ்யருமாகிய வீணை மீனாட்சி ஸுந்தரமய்யா, வீணையில் மிகவும் நிபுணராகிய ஸமஸ்தான பண்டிதர் வீணை சுப்பய்ய அண்ணாவி, வாய்ப்பாட்டு மகாவித்வான் திருநெல்வேலி வெங்கு பாகவதர், மதுரை ராமையா, முத்துஸ்வாமி தீக்ஷிதரின் சிஷ்யரான தேவூர் ஸுப்ரஹ்மண்ய அய்யா, முதலிய வித்வான்களையும் ஆதரித்து, தினம் அவரவர்களது வித்யைகள் பிரகாசிக்குமாறு அவகாசம் அளித்து, தகுந்த ஸன்மானங்கள் அளித்து, அவரவர்களின் யோக்கிய

தைக்கு ஏற்றவாறு சம்பளங்கள் ஏற்படுத்தி, அவர்களது குடும்பங்கள் தக்க போஷணையுடன் நடந்து வருமாறு, கௌரவத்துடன் காப்பாற்றி வந்தார்.

இத்துடன் கழுகுமலை கந்தஸ்வாமி கோவில் ஜீர்ணோத்தாரணம், பொற்கலசம் பதித்த விமானம், வெள்ளியால் செய்யப்பட்ட ஷோடசோபசார விளக்குகள், பல வாகனங்கள், லக்ஷ வராகன் விலையுள்ள ரத்ன கசித கிரீட குண்டலங்கள், நவரத்ன ஆபரணங்கள், முத்துமாலைகள் முதலிய பல திருப்பணிகளைச் செய்வித்தார். தேவஸ்தானத்திற்கு முன்பிருந்த கிராமங்களுடன், விசேஷ பூஜை, நைவேத்யம், உத்ஸவம் இவற்றிற்காக அநேக கிராமங்களை ஸர்வமான்யங்களாக ஏற்படுத்தினர். எட்டயபுரத்திலுள்ள சிவாலய, விஷ்ணுவாலய ஜீர்ணோத்தாரணம், தங்கக் கலச விமானங்கள், உத்ஸவங்கள் நடத்த முன்னிருந்த கிராமங்களுக்கதிகமான கிராமங்கள், இவற்றையளித்தார். இவை இன்னும் நடந்து வருகின்றன.

இவ்வரசர் சொந்தமாக சுமார் ரூ. 20000 செலவில் கங்கை கொண்டான் சித்ரா நதிக்கும் கயத்தாறு பாச நதிக்கும் ஜனங்களுக்கு உபகாரமாகும்படி பாலங்கள் கட்டினர். எட்டயபுரத்து எல்லா வீதிகளுக்கும் கப்பி போடுவித்து, மரங்கள் நடுவித்து, குளங்களுக்கு நற்படிக்கட்டுகள் கட்டுவித்து, எளியவர்களுக்கு கொடை வள்ளலாக விளங்கினர். இத்தகைய புண்ணிய புருஷர் ஒருவர் இந்த அரச வம்சத்தில் எக்காலத்திலும் தோன்றியதில்லை என்று தடையின்றிக் கூறலாம்.

மூலம்:—ஸ்ரீ ஸுப்பராம தீக்ஷிதர் இயற்றிய இயலிசைப் புலவர் வரலாறு என்ற தெலுங்கு நூல். தமிழாக்கம்: தி. ஸ்ரீ பார்த்தஸாரதி.

ASOKA SCENTED BETELNUT POWDER

தொல்லை தரும் திருவள்ளுவர்!

இம் மனிதவர்க்கத்திலே தோன்றியவர்களுள் மிகவும் பொல்லாதவன் வள்ளுவன். ஆறறிவு படைத்த மனித வர்க்கத்தில்—தான் தோன்றிய மனித ஜாதியில் ஒரு பகுதியினரை அவன் ஏசுகிறான், திட்டுகிறான். சபிக்கிறான். மனிதனுடைய மகா மகிமை வள்ளுவனுக்குத் தெரியவே தெரியாது. அதுவும் மிகப் பழைய காலத்திலே போக்கு வரவுச் சாதனங்களோ, நாகரிகச் சின்னங்களாகிய முகப் பொடிகளோ (மூக்குப்பொடியன்று), மயிர் கத்தரிக்கும் ஸ்தாபனங்களோ, உடனே ஆடைகளை ஒலித்து வெண்மையாக்கிக் கொடுத்து மனித வர்க்கத்தின் மதிப்பினையே காக்கும் (துகில் ஒலி) நிலையங்களோ இல்லாத காலத்தில் வசித்த வள்ளுவன் நாகரிக மக்களைத் திட்டுவதென்றால் இந்த ஜன நாயக யுகத்திலே அதனைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா?

வள்ளுவனைப் படத்திலெல்லாம் நீண்ட தாடியும் சடாமுடியும் பொருந்திய ஒருத்தனாகவே சித்திரித்திருக்கிறார்கள். அது மிகவும் சரியானதே. வாசனை மிக்க மயிர்த் தைலங்களும் கத்தரிக்கோல் செய்யும், சித்திர விசித்திர வேலைப்பாடுகளும் கிடைக்கப்பெறாத அக்கால மனிதன் தலையிலே முறுகிய சடையும் முகத்திலே நீண்ட ரோமமுமின்றி வேறெதனைத்தான் நாம் காணலாம். இங்ஙனம் நாகரிகச்சின்னமேயற்ற வள்ளுவன் மக்களில் ஒரு சாரரை மாக்களென்கிறான். முதல் முறை மாக்கள் என்ற சொல்லை நான் கண்டபோது மக்களினும் உயர்ந்தவர்கள் இவர்கள்; ஆகையால் வள்ளுவன் இவர்களை அப்படி நீட்டிக் கூறுகிறான் என நினைத்து அவனை மிகவும் வாழ்த்தினேன். வள்ளுவன் சூழ்ச்சியை என் கூரிய மூளை கண்டு பிடிக்க எத்தனையோ வருடங்கள் சென்றுவிட்டன.

என்னைச் சீடனாகப் பெறப் புண்ணியம் செய்த ஆசிரியர் ஒருவர் 'விலங்கொடு மக்களனையர்' என்ற குறட்பாவை 1330 ஆம் முறை அருமை பெற எனக்கு விளங்கப்படுத்திய போதுதான் வள்ளுவன் சூழ்ச்சியும் பரிமேலழகன் நயவஞ்சகமும் வெளியாயின. கல்லாதவர்கள் தீமைக் குணமுடைய விலங்குகளாம். கற்றவர்கள்தாம் மனிதர்கள் எனப்படுவாராம். ஐயோ சுத்த மதிபடைத்த உலகமே! வள்ளுவன் மனிதனைத் திட்டுவது உன் சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிப்பதாக உனக்குத் தோன்றவில்லையா?

மனிதன் சிறப்பு

மனிதன் எத்தன்மை வாய்ந்தவன், அவன் அறிவுந் திறனும் எப்படிப்பட்டவை, பிறரைப் பார்த்து நாகரீக வழியில் நடந்து முன்னேறும் அவன் சிறப்புத்தான் எத்தகையது என்பதனை அறியாத பண்டைக் கால வள்ளுவன் ஏதேதோ சொல்லுகிறானே. மனிதன் இக்காலத்தில் தன் முகத்தினைச் சிங்காரமாகச் சிறப்பிக்க விட்டிருக்கும் மீசை (இதனை வீசை என்றும் அதுதான் சரியான பதமென்றும் ஒரு சிலர் கூறுவர். மீசையோ வீசையோ சரியென்பதனை மீசையையோ அன்றேல் வீசையையோ கேட்டுத்தான் அறியவேண்டும் போலும்.) வகைகளைத்தான் வள்ளுவன் அக்காலத்தில் கண்டிக்க முடியுமா? அடர்ந்து செழித்த மீசையென்ன, ஒட்ட நறுக்கி உதட்டுடன் விடப்பட்டதென்ன, நீட்டி எருமைக் கொம்பு போல மூக்கினிருமருங்கும் விடப்பட்டதுதானென்ன (இவைகளெல்

லாம் சற்றே கிழடு தட்டிவிட்டன) மூக்கடியிற் பெயரளவில் இரு ரோமங்களை மாத்திரம் விட்டுக் ஹிட்லர் மீசையென்ற பெயருடன் விளங்கும் அஃதென்ன - இன்னவையெல்லாம் அக்காலவள்ளுவனுக்குவிளங்க வழியேது? இத்தகைய சிறப்புடனிலங்கும் மனிதன் விலங்கா? நிற்க,

கையாலாகாதவன், பணந்திரட்டும் வழி தெரியாதவன், ஒரே ஒரு மந்திரத்தை அடிக்கடி உச்சரிப்பான். அதன் பெயர் அறம். சொல்வதைக் காலச் சுருக்கத்தோடு சுருக்கமான வழியிலே சேர்க்க வழிகாணு வள்ளுவன் 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' என்று கூறி அழுது வழிகிறுன். இது மிகப் பழைய காலத்திற்குப் பொருத்தமான பழமொழி. இந்த 20-ஆம் நூற்றுண்டில் இலக்கியப புதுமை வாய்ந்ததாக இது இல்லை. சண்டை செய்யப் புறப்பட்ட சண்டித்தனமில்லா அருச்சுனன் சண்டைக் களத்திலே எதிரிகளாகிய மிண்டர்களைப் பார்த்து விட்டு வில்லுடன் பாணங்களைக் கீழே போட்டுவிட்டுச் சாமியாராகப் பார்த்த மாதிரியாக அல்லவா இருக்கிறது வள்ளுவன் நியாயம் 'அன்று அருச்சுனனைச் சாமியாராகாது தடுத்த கண்ணனை ஒத்த விண்ணன் ஒருவனல்லவா நமக்கின்று தேவை. இன்றேல் வள்ளுவர் வழியில் எல்லோரும் சென்று கையாலாகாதவர்களாகி விடுவார்கள் அல்லவா?

நஷ்டமடைவதா?

ஐயா வள்ளுவரே! நீர்கூறும் அறவழித் தேட்டம் எங்களுக்குப் பெரிதும் நஷ்டந்தான் தரும். உமக்காக நாங்கள் வாழ்க்கையின் உல்லாசங்களை விட்டு விட்டு நஷ்டமடைய வேண்டுமா? எங்களிலே சூரராயிருக்கும் ஒரு சாரார் சுகமாக வாழ்வது உமக்குப் பொறுக்க முடியாவிடின் நீர் கண்ணுடன் வாயை மூடிச் சும்மா இரும். சம்மதமில்லாவிடில் உமது சடாமகுடத்துடன் நீர் புகுந்திருக்க உமக்கு அடவிதானில்லையா? உமது உபதேசம் வேண்டாம். உமது குரல் மிகப் பழைய வாழ்க்கைக்கு உதவா நூல். நமது நவீன சாணக்கியர்களுடைய சுருக்க வழி, சுகவழி, உமக்குத் தெரியவே தெரிய வராது. அதனைத் தெரிந்து கொள்ள உமது பழைய மூளைக்கு உரிமை கிடையாது.

திடீரென வந்தது சண்டை எனவொன்று. அது எங்கிருந்தோ தோன்றிற்று. நல்ல மூளையுடைய சிலர்,இதுவரை ஆண்டிப் பண்டாரங்களாக இருந்தவர்கள், மிகத் துணித்சலுடன் இறங்கினர் பயங்கரத் துறை ஒன்றில். அதிற் குளித்தனர். இல்லை முழுகினர். எடுத்தனர் முத்தினை. கட்டினர் மாடமாளிகை கூட கோபுரங்களை. இட்டனர் உயர்ந்த சட்டைகள் அணிந்தனர் வகைவகையான அணிவகைகள். அவர் தம் கழுத்துச் சங்கிலியையும், கைவிரல் மோதிரங்களையும், பகட்டான பட்டுடைகளையும், காலத்திற்கேற்றக் குறுகிய மீசை வகைகளையும், காலாற் சற்றே மிதித்துக் கையாற்றெட்ட மாத்திரத்தே துள்ளி ஓடும் கார் வகைகளையும் (வள்ளுவரே உமக்குப் படிப்பு—இக்காலப் படிப்பு மிகக் குறைவு. அதுவும் ஆங்கில அறிவோ சுத்த சூனியம். 'கார்' என நாம் கூறின் நீர் கருமேகத்தையே நினைப்பீர். நாம் கருதுவது Car என்னும் ஆங்கிலப் பதம். உமக்குத் தெரிந்தது கிழட்டுத் தமிழும் வரட்டு வடமொழியுந்தானே) கண்டு பொறுமை மீறிய நீர் 'அழக் கொண்ட எல்லாம் அழப்போம்' என்றீர். இதிலிருந்தே உண்மையும் நாம் அளந்து விடுவோம். உமது சகோதரன் ஒருவன் அறத்து வழிப் படூஉம் ஆக்கம்' என்று கரடுமுரடான தமிழில் அழுது வழிகிறுர்.

அடுப்பிற்கு விறகா?

எப்படி யாம் உம்மைத் திட்டினும் உமக்குச் சிரிப்புத்தான் வருகிறது. சுத்த மண்டையையுடைய சிலரோ 'உயர்ந்த காப்பியங்கள்—அறவழி காட்டும் ஒளி மண்டலங்கள்—தமிழ்க் களஞ்சியங்கள்' எனச் சில (சற்றே பழைய) சாரார் கூறும் நூல்களையெல்லாம் அடுப்பிலிட்டெரிப்பதற்குரிய விறகுகள் என்கிறார்கள். அப்படியும் செய்து காட்டியும் வருகிறார்கள். அந்த முன்னேற்ற அதி தீவிர வாதிகளைக்கூடப் பின்னேற்ற வாதியாகிய நீர் வென்றுவிட்டீர். அந்த முன்னேற்ற வாதிகளிடம் நீர நல்லபிள்ளைப் பட்டங் கேட்டுவிட்டீர். பார்த்தாற் பசுப் போலத் தோன்றும் பயங்கரச் சூழ்ச்சிக்காரர் நீர். நீர்தானும் சரியான ஆதித் திராவிடராம். உமது நூல் தானும் தூய தமிழ்முறை. உமது நூல் அடுப்பிற்கு விறகாகாததோடு தமிழ் மறையாகவும் போற்றப்படுகிறதே. எல்லோரையும் ஏமாற்றும் பெரும் போர்வழியான நீர் சிரியும். நன்றே சிரியும். உமது சிரிப்பு நமக்கு எங்கே தோற்றப்போகிறது.

சும்மா இருக்க முடியாமல் குறள் நூல் செய்த நீர் பிறப்பாலும் பலருக்குத் தொந்தரவு தருகிறீர். ஆதித் திராவிடரா, அருமறை அந்தணரா, அரச காரியம் செல்பவரா என உண்மை அறிந்து கொள்ள முடியாதிருக்கிறது. நீர் பிறந்தது வைகாசி அனுடத்திலா விசாக பூரணையிலா, ஆவணி அவிட்டத்திலா, மாசி மகத்திலா? நீர் கூறுவிடின் நாங்கள் இந்த ஜனநாயக காலத்திற் சீட்டு (எனும் வோட்டு என்ற வாக்கு) ப்போட்டுக் கூடிய வாக்கு எத்திறத்திற்குக் கிடைத்ததோ அதனையே நீர் பிறந்த தினமாகக் கொண்டாடி விடுவோம். கவனம். உமது பிறப்புச் சாட்சிப் பத்திரம் எங்கிருக்கிறதெனக் கூறினால் நாமே பதிவு கந்தோரில் (அது மயிலாப்பூராயினும் சரி, மங்களாபுரமாயினும் சரி) இருந்து எடுத்து உமது நாளைக் கொண்டாடி விடுவோம். இன்றேல் எமது உயர்ந்த வாக்கு எடுக்கும் முறையுள தன் பதனைக் கவனத்தில் இருத்துக.

—*Eelakesari*, Jaffna.

அசோகா சுகந்த பாக்குத்தூள்



ஆரோக்கியம் தரும் அரிய கிழங்கு

★

வீட்டுத் தோட்டக் காய் கறிகளின் ராஜாவாகும் உருளைக் கிழங்கு. உலகிலெங்கும் மற்றெந்த காய் கறிகளையும்விட அதிக உபயோகத்திலுள்ளதுமாகும் உருளைக் கிழங்கு. மேனாடெங்கும் அனைவருக்கும் தினசரி ஆகாரத்தில் அத்தியாவசியமாகவும் விளங்குகிறது இது.

முதன் முதலில் உருளைக்கிழங்கு தென் அமெரிக்காவில் தான் உற்பத்தியாயிற்று. அங்கிருந்து ஸ்பெயின் தேசத்தவர்களால் ஐரோப்பிய ராஜ்யங்களுக்குப் பரவியது.

வெகு நாள்வரை உருளைக்கிழங்கு ஒரு விஷப் பொருள் என்று கருதப்பட்டு வந்தது. 1771-ம் வருஷத்தில் நிகழ்ந்த பிரெஞ்சுப் பஞ்சத்தின்போது கோதுமைக்குப் பதிலாக உபயோகப்படுத்த தகுந்த ஒரு உணவுப் பொருளைக் கண்டு பிடிப்பவர்களுக்கு ஒரு பரிசை ஏற்படுத்தினார்கள் பிரெஞ்சு சர்க்கார். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் உருளைக் கிழங்கை உணவாக உபயோகிக்கலாமெனத் தெரிய வந்தது.

சில ராஜ்யங்களில் வருஷந்தோறும் தலைக்கு எவ்வளவு உருளைக் கிழக்கு உபயோகப்படுத்துகிறார்களென்று கீழ்க் கண்ட ஜாபிதாவிலிருந்து தெரியவரும் :—

இங்கிலாந்து	210	பவுண்டு
டென்மார்க்	246	,,
ஜெர்மனி	398	,,
பிரான்ஸ்	400	,,
பெல்ஜியம்	440	,,

மனிதருக்குப் புஷ்டியளிக்கும் உணவில் என்னென்ன ரஸாயன சத்துக்கள் தேவையோ அவையனைத்தும் உருளைக் கிழங்கில் நிறைந்துள்ளது.

இது விலை மலிவானதாலும், நாக்குக்கு மிகுந்த சுவையளிப்பதாலும் நீண்ட நாட்கள் கெடாமலிருப்பதாலும் உணவுச் சத்துக்கள் ஏராளமாக நிரம்பியதாலும் மக்கள் பெரிதும் விரும்பி உபயோகிக்கிறார்கள்.

விட்டமின் 'ஸி' குறைவால் பிரெஞ்சு நாட்டு மக்களை அடிக்கடி வாட்டிக் கொண்டிருந்த கரப்பான் நோய்களுக்கு உருளைக் கிழங்கு சஞ்சீவியாக அமைந்தது. ஏழை மக்களுக்கு 'விட்டமின்' குறைவைப் பூர்த்தி செய்வதில் நிகரற்றது.

வயிற்றில் ஏற்படும் உப்புசம், புளியேப்பம் முதலிய கோளாறுகளை உருளைக் கிழங்கு நிவர்த்தி செய்து ஜீரண சக்தியளிக்கிறது. சுலபமாகவும் ஜீரணமாகும் ஒரு உணவுப் பொருளாகும் இது. உருளைக் கிழங்கை விதவிதமாகச் சமைக்கலாம்.

உருளைக் கிழங்கை தோலோடு வேக வைப்பதே சிறந்தது. ஏனென்றால் அதிகமான சத்து உருளைக் கிழங்கின தோலினடியில் தானிருக்கிறது. வேக வைக்கும்போது இந்தச் சத்து கிழங்குடன் சேருகிறது. பிறகு தோலை எடுத்துவிடுவதால் இந்தச் சத்து குறைவதில்லை.

மிகச் சிறிய உருளைக் கிழங்கு ரகத்தில் ஒருவித விஷமிருக்கிறதாம், பயிராகும்போது வெயில் அதிகமாகப்படுவதால் கிழங்குகளிலும் இந்த விஷம் சேர்ந்து விடுகிறதாம். உருளைக் கிழங்கில் முளை விடும் சமயத்தில்தான் இந்த விஷம் அதிகமாகக் கலக்கிறதாம். அதனால் முளை விட்ட உருளைக் கிழங்கை உண்ணுவது மிக ஆபத்தாகும்.

THE FAMOUS

AROGYA RAKSHAMIRTHAM MEDICINE

For impurities of Blood, general debility, piles of all kinds, Fistula, constipation, Gastric and Breathing troubles, Menstrual complaints, Karappans and other complaints of children etc.

N. B. **(Agency will be given on decent commission)**

Head Office Address

A. R. DEPOT

Prop: (M. PAPPACHAN)

Kundara P. O. T. C. STATE.

பெண் மொழிகள்

'பெண்' கண்ணைக் கவரும் வண்ண மலர். இஷ்டம் அறியாமல் தீண்டினால் திடீரென்று வெடிக்கும் குண்டு!

★

பெண்களின் வாயைவிட அவர்களின் 'கண்களே' அதிகம் பேசும்!

★

பெண்களின் உடல் அழகைப்போல உலகத்தில் அழகான வஸ்துவுமில்லை; அதைப் போல விகாரமும் வேறு கிடையாது.

★

பெண் தெய்வங்களைப் படைத்து இவ்வுலகத்தை இனபமய மாக்கிய ஹே பகவானே! இந்த ஆண் மிருகங்களையும் ஏன் படைத் தாய்?

★

நவநாகரிக ராணிக்கு அழகு 'பவுடரில்' தெரியும்.

★

அழகும் கற்பும் ஒருங்கே அமைந்த பெண் ஆண்டவனின் சிறந்த சிருஷ்டி! உலகத்தின் அற்புதம்.

★

பெண்களின் உண்மை அழகு அவர்களின் முகத்தில் இல்லை. அவர்கள் உள்ளத்தில் இருக்கிறது.

★

ஆண்டவனுக்கு அடுத்தபடியாக நாம் பெண்களுக்குத்தான் கடமைப்பட்டிருக்கிறோம். முதலாவதாக நம் பிறப்பிற்கு; இரண் டாவதாக நம் வாழ்க்கைக்கு.

★

பெண்களின் நாக்கு மூன்று அங்குலம்நீளமுள்ளதே, ஆயினும் அது ஆறடி உயரமுள்ள ஆண் மகனைக் கொல்லும் தன்மையது

"ஜனக குமாரி"

சம்பாஷணை — ஒரு கலை

★

கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்து கொண்டு சற்று அறிவை வளர்த்துக்கொள்ளும் கலையே சம்பாஷணையாகும். இதன்மூலம் மனிதன் முன்னேற்றமடைவான். எவ்வளவு அற்ப விஷயத்தை வைத்துக்கொண்டேனும் சம்பாஷணையைத் தொடங்கினாலும் அறிவை வளர்க்குமளவிற்கு அது வளர்ந்தால்தான் சம்பாஷணையில் பயனுண்டு.

நண்பர்களிடையே நடக்கும் சம்பாஷணை; நல்ல சூழ்நிலையில் நடக்கும் சம்பாஷணை; ஏகோபித்த ஒரு கருத்தைப்பற்றிய சம்பாஷணை; இவைதான் அறிவை வளர்க்கும் சம்பாஷணையாகும் என்று கிரேக்க வேதாந்தியான சோக்ரடீஸ் கூறியுள்ளார்.

கிரேக்க பெரியார் சம்பாஷணைப் பிரியர்கள் அனுஷ்டிக்க வேண்டிய சில கட்டுப்பாடுகளையும் கூறியுள்ளார். முதலில் ஒரு பிரச்னையையும் பிறகு அறிஞர்களின் தீர்மானத்தையும் பொதுவாக ஒப்புக்கொள்ளவேண்டும். அதற்குப் பிறகு அதன் சாதக பாதகங்களை அநேகரும் கூற வேண்டும். மேற்கூறிய அறிஞரின் தீர்மானத்தை ஆதரித்துள்ள அபிப்பிராயங்கள் சரியென்றும் அதற்கு எதிரான அபிப்பிராயங்கள் தவறென்றும் ஒப்புக்கொண்டு சம்பாஷணை முடிவடைவதே வழக்கமாயிருந்தது.

வீண் பேச்சில் கால விரயம் அதிகமாயுள்ள இக்காலத்தில் மேற்கூறிய திட்டங்களும் கட்டுப்பாடுகளும் எவ்வளவோ நன்மை பயக்கக்கூடியவை.

விமர்சனங்களின் உண்மை கருத்தைக் கவனித்து அவற்றிற்கு உண்மை பதில் கூறுவது தான் இப்போது சகஜமில்லையே! விமர்சனத்திற்குப் பதிலாக விமர்சகரைத் தாக்குவது தானே இக்காலப் பழக்கம். இம்மாதிரி செய்யாவிடில் எவ்வளவு முக்கியமான பிரச்னையைப்பற்றியும் அனைவரும் அவரவர்கள் அபிப்பிராயங்களை ஒளிவு மறைவின்றிக் கூறி பிரச்னைகளுக்கு முடிவு காணமுடியுமே! அதனால் உலகமெங்கும் இன்றைய வாழ்க்கையை எவ்வளவு மங்களகரமாக்கமுடியும்!

ஆனால் இம்மாதிரி அறிவு வளர்ச்சியளிக்கும் சம்பாஷணைக்குத் தூண்டுகோலாகவும் வழிகாட்டியாகவும் பெரியார் சோக்ரடீஸ் தான் திரும்பி வரவேண்டுமா?

—Dr. A. W. Griswold

அதிசய அணைக்கட்டு

பாக்ரா நங்கல் அணைக்கட்டைப் பற்றி என்னால் விஸ்தரிக்க இயலாது. அது பிரம்மாண்டமான திட்டமாகும். கிழக்குப் பஞ்சாபிற்குச் சென்று நாம் கண்ணால் காணவேண்டிய ஒரு அரிய காட்சியாகும் அது. இந்த அணைக்கட்டு உங்கள் கல்வி அறிவு பூர்த்தியாவதற்கு நீங்கள் இதை அவசியம் பார்த்தாகவேண்டுமென்றும் உறுதியாய்க் கூறுவேன்.

இந்த அணைக்கட்டுக் கட்டுவதற்கு 159 கோடி ரூபாய் பிடிக்கும். ஒரு லக்ஷத்து அறுபத்தேழாயிரம் ஆட்கள் வரையிலும் ஒரே சமயத்தில் இதற்காக பல தினங்கள் வேலை செய்ததுண்டு. இதன் உயரம் 680 அடி.

உலகிலுள்ள இரண்டாவது மிகப் பெரிய அணைக்கட்டாகும் இது. நீர்ப்பாசன வசதியை அளிக்கும் சக்தியில் உலகிலேயே இதுதான் பெரியது. ஒரு கோடி ஏக்கரா நிலங்களுக்கு இந்த அணைக்கட்டுமூலம் நீர்ப்பாசனம் செய்யலாம். இருபது லக்ஷம் டன் உணவுப்பொருள்கள் இந்த அணைக்கட்டு மூலம் மக்களுக்குக்கிட்டும்.

பிரம்மாண்ட அணைக்கட்டுகளுக்குப் பேர் போன ருஷ்யாவில் கூட பாக்ரா அணைக்கட்டு மூலம் கிடைக்கக்கூடிய அளவு மின்சார சக்தி இல்லையென்று கூறுவது மிகையாகாது. இந்த அணைக்கட்டுக்கு வேண்டிய நுணுக்க வேலைகளெல்லாம் இந்திய நிபுர்ணர்களாலேயே கவனிக்கப்பட்டு வருகிறது. 41 அயல் நாட்டு நிபுணர்களும் சேவை செய்துள்ளார்கள்.

இவ்வளவு அதிசயக்கத் தக்க பிரம்மாண்டமான அணைக்கட்டைப் பற்றி பாரத மக்கள் பெரிதும் பெருமை கொள்ளலாம். பாக்ரா நங்கலில் அநேக விசித்திரங்களைக் காணலாம். அங்கே ராக்ஷச யந்திரங்கள் ராக்ஷசர்களைவிட வியக்கத்தக்க அற்புத வேலைகள் செய்வதைக் காணலாம்.

மலையை நொடி நேரத்தில் பெயர்த்தெடுப்பதையும் காண்பீர்கள். பள்ளத்தாக்குகளும் மேடாகும் அதிசயத்தையும் பார்க்கலாம். மனிதனின் கட்டளைக்கிணங்கி நதிகள் எந்தப்பக்கம் வேண்டுமானாலும் பிரவாகம் எடுத்து ஓடும் காட்சி பிரமாதம்.

நீங்கள் பூமிக்கடியில் கட்டப்பட்ட ஒரு அறையில் நின்று கொண்டிருந்தால் தலைக்கு மீது ஒரு பிரம்மாண்ட நதியின் பிரவாக சப்தத்தைக் கேட்கலாம,

இதையெல்லாங் காணும் பொழுது நம் நாட்டு சாதனைகளையெல்லாம் நன்கு உணராதவர்களே நம் பாரத மக்கள் என்று நான் வருத்தப்படுகிறேன். மக்களனைவருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ந்த இதுபோன்ற பிரம்மாண்டமான சாதனைகளைக்கண்டு மகிழ்வதற்குச்சர்க்கார்சந்தர்ப்பமளிக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு நம் நாட்டார்கள்



PHOTO] அணைக்கட்டின் கம்பீரத் தோற்றம். [PIB



PHOTO] அணைக்கட்டு வழியாக நீர்ப்பிரவாகக் காட்சி. [PIB

புரிந்துள்ள அரிய பெரிய சாதனைகளைப்பற்றிப் பெருமிதம் தோன்றும்.

வெளி நாட்டுக்குச் செல்லும் நம் தேசப் பிரதிநிதிகள் இங்கு திரும்பி வரும்போது அங்கு கண்ட அரிய சாதனைகளைப் பற்றி ஓயாமற் புகழ்கிறார்கள்:

இம்மாதிரி பிரதிநிதிகளுக்கு நம் சர்க்கார் போதியமட்டில் பயிற்சி யளிக்கவில்லையென்றே கருதவேண்டியிருக்கிறது. ஆறு மாத காலத்திற்காவது இந்தியாவின் ஐந்தாண்டுத்திட்ட சாதனைகளையும் மற்ற வியக்கத்தக்க அதியங்களையும் காண வசதிகள் பெற்ற பிறகே இந்தியர்கள் அதிலும் இந்திய பிரதிநிதித்துவ கோஷ்டிகளின் அங்கத்தினர்கள் வெளி நாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

பாக்ராநங்கல் அணைக்கட்டையும் சிந்திரி உரத் தொழிற்சாலையையும், சித்தரஞ்சன் ரயில்வே தொழிற்சாலையையும், டாட்டாவின் எஃகுத் தொழிற்சாலையையும், குவாலியர் ஜியாஜிராவ் பஞ்சாலையையும் உத்தரப்பிரதேசத்திலுள்ள கங்கைக் கால்வாயையும் கோலார் தங்கச் சுரங்கங்களையும் பங்களூர் விமானத் தொழிற்சாலையையும் புஸாவிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தையும் டேராடூன் வன ஆராய்ச்சிக் கழகத்தையும் ஆக்ராவிலுள்ள தயாள்பாக் தொழிற்சாலைகளையும், சாந்திநிகேதன விஸ்வபாரதி கலைக்கூடம் முதலிய ஸ்தாபனங்களையும் கண்டு களித்துள்ள எந்த இந்தியருக்குத்தான் பாரதத்தைப் பற்றி அளவிடற்கரிய ஆனந்தமும், பெருமையையும் கொள்ளத்தோன்றாது?

—K. M. Munshi

THE ARYAVAIDIA PHARMACY [C.B.E.] LTD

H. O. Trichy Road, Coimbatore.

(*Phone No.* **108**)

Branch :—

140, Bazaar Road, Rayapettah Madras-14.

(*Phone No.* **85752**)

Approach for effective and excellent Ayurvedic medicines and treatment

Special treatments like Dhara, Pizhichil etc., undertaken.

Consulting Physician :—

Arya Vaidyan

P. V. RAGHAVA VARIER

கண்ணனை அழைக்காத காரணம்

மகாபாரதத்தில் ராஜ சூய யாகம் ஒரு முக்கியமான கட்டம். இந்த யாகம் பாண்டவர்கள் திக்விஜயஞ் செய்ததன் சின்னமாக நடந்தேறியது. இந்த யாகத்தைப் பற்றிய மிகச் சுவையான பல தகவல்கள் மகா பாரதத்தில் காணப்படுகின்றன. இந்த யாகத்திற்குப் பல தேச ராஜாக்களுக்கும், பிரமுகர்களெல்லோருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. ஆனால் ஒருவருக்கு மட்டும் அழைப்பு அனுப்பவில்லையாம்.

பாண்டவர்களுக்கு உயிருக்குயிராயிருந்தவரும் அவர்கள் ஆபத்திலும் சம்பத்திலும் சதா துணையாயிருந்து அவர்களை வாழ்வித்தவருமான ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா தான் இவர். இம்மாதிரி ஒப்பற்ற நண்பனுக்கு அழைப்பு அனுப்பாதது பற்றி ஏதாவது நியாயம் கூறமுடியுமா? ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப்போல் தங்களுக்கு பந்துவும் மித்திரனுமாயிருப்பவருக்கல்லவா அவசியம் அழைப்பு அனுப்ப வேண்டும்.

எந்தக் காரணங்கொண்டும் எவ்வளவு தான் வருந்தியழைத்தாலும் அழைப்போர்கள் வீட்டிற்கு வர விரும்பாதவர்களைக் கட்டாயமாக அழைக்கவேண்டும். யாராவது அழைத்து ஒருவேளை போஜனமளிக்கமாட்டார்களா என்று ஒரே நோக்கமாக இருப்பவர்களைப் போஜனமளிக்கும் வைபவங்களுக்கு அழைப்பதுதான் நியாயம்.

காலையிலெழுந்ததும் எந்த வீட்டில் அதிகமாய்ப் புகை கிளம்புகிறதென்றும், எந்த வீட்டிற்குச் சென்றால் ஒரு வேளை போஜனம் கிடைக்கும் என்றும் ஏங்குபவர்களுக்கு நாம் பொதுவாகப்போஜனமளிக்கும் சந்தர்ப்பங்களில் அழைப்பு என்ற மதிப்புக் கொடுத்தழைப்பது, ஒரு சிறப்பான காரியமல்லவா? ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா இந்த ரகங்கள் இரண்டிலும் சேராதவர்.

பாண்டவர்களும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் ஒன்றே என்று கூறலாம். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் கிருபை இல்லாவிடில் பாண்டவர்கள் ஏது? மகா பாரதக் கதைதான் ஏது? பாண்டவர்களின் நன்மையைக் கருதித்தானே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பாரத யுத்தத்தில் அர்ஜுனனுக்குச் சாரதியாகச் சென்றார், நிராயுத பாணியாகக்கூட. அதனால் ஸ்ரீ கிருஷண பரமாத்மாவுடன் மிகவும் ஐக்கியமாகியிருந்த பாண்டவர்கள் நடத்தும் ராஜசூய யாகத்திற்கு ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவிற்கு அழைப்பு அனுப்புவதென்பது அர்த்தமற்றதுதானே!

பாண்டவர்கள் நடத்தும் எந்தக் காரியங்களிலும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிற்குப் பங்கெடுத்துக்கொள்ள ஓய்விருந்தால் அவர் வருவாரா, வரமாட்டாரா என்ற கேள்விக்கே இடமில்லை. அவசியம் வந்தே தீருவார் என்பதில் ஐயமுமில்லை. இதுதான் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவிற்கு அழைப்பு அனுப்பாததன் ரகஸ்யம்.

[கேரளத்தில் புராணக்கதைகளை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறும் பாடகர் அளிக்கும் சுவையான ஒரு வியாக்கியானமாகும் இது.]

நாச குண்டுகள்

●

ஹிரோஷிமாவிலே அணுகுண்டு படுத்திய பாடு மனித நினைவினின்றும் அழியாது; உலக வரலாற்றினின்றும் மறையாது. எத்தனை சேதம்! எவ்வளவு பெரிய கோரம். மூன்று லக்ஷத்திற்கு மேல் ஒரே கணத்தில் உயிர்ப்பலி. பெரு நகரம் இருந்த இடத்திலே சுடுகாட்டு சாம்பற்படலம். கட்டிடம் இருந்த இடத்திலே குட்டிச் சுவர்கூட இல்லை. பூமியே அதிர்ந்தது; வானம் இருண்டது. கடல் கொந்தளித்தது, இதோடுபோகவில்லை. பல மைல் தூரம் காற்றுப் பட்ட இடமெல்லாம் கருகினவாம். குண்டு வீழ்ந்து பத்து ஆண்டுகளாகியும் அந்தப் பிரதேசத்திலே கருகிய பச்சை கருகினதுதான். கரு ஜெனிப்பதில்லை. ஜெனித்தாலும் குரூரத்தோடுதான். இந்தப் பயங்கரத்தைக் கேட்கவே நெஞ்சம் நடுங்குகிறது. பார்த்தால் என்ன பாடுபடுமோ?

இந்தப் பயங்கரக் குண்டை வீசிய புண்ணியம் அமெரிக்காவைத்தான் சேரும். அதைச் சுற்றி கூத்தடித்த நேசநாடுகளும் இந்தப்பழியிலிருந்து மீளாது. சுதந்திரத்திற்காகவும், சமத்துவத்திற்காகவும், உலக சமாதானத்திற்காவும் பாடுபட்ட வாஷிங்டன், லிங்கன், வில்ஸன் போன்றோரின் ஆவி தங்கள் அமெரிக்க சந்ததியினர் செய்த அக்கிரமத்தை எண்ணிக் கண்ணீர் வடிக்கும்.

விடாமல், முடியாமல் நீண்டுகொண்டிருந்த யுத்தத்தை அமெரிக்கா முடிக்க எண்ணியதில் தவறில்லை. அதிலே வெற்றியைக் காணத் துடித்ததிலும் அக்கிரமமில்லை. ஆனால் சண்டைக்காகவும் சமாதானத்திற்காகவும் பயங்கரக் குண்டுகளை வீசி சுட்டுப் பொசுக்கிய படலம் அமெரிக்க சரித்திரத்தில் ஒரு மெச்சும் ஏடாக சேர்க்க முடியாது.

யுத்தத்திற்கு யுத்தம்; பழிக்குப் பழி; வெறிக்கு வெறி என்பது தான் யுத்தத்தின் போக்கானல் அதனல் ஏற்படும் விளைவுகளை அந்தந்த நாடுகளே அனுபவிக்கவேண்டியதுதான். அப்படித்தான் யுத்தத்தில் வீரம், தர்மம் என்பவைகளெல்லாம் பழங்கதைகளாகி இன்று ஒரே அழிவு யுத்தங்களாகமாறியிருக்கின்றன. இந்தக் கைங்கரியத்தில் விஞ்ஞானம் தன் பங்கைச் செய்து வருகிறது.

அணுவைக் குண்டாக்கியதில் விஞ்ஞானத்தின் அற்புதம் இல்லை. அதிலே பெரும் விபரீதம் ஆகியிருக்கிறது. அணுவிலே அசுர சக்தி இருக்கிறது என்பது கண்டுபிடித்தாய்விட்டது. அந்தச்

சக்தியை எதிரி என்ற காரணத்திற்காக நம்மில் ஒரு பகுதியினர் மீது வீசுவதா? வானையும், கடலையும், காற்றையும் பாழ்படுத்தி உயிரினத்தையே வாழமுடியாமல் செய்வதா?

அணுசக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தலாம். சமாதான வாழ்வுக்கு அணுவின் உபயோகம் அளவிட முடியாது என்று பேசும் பேச்சிலே மோசமில்லை. ஆனல் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளை உண்டாக்கி பலப் பரீட்சை பார்க்கும் வேடிக்கையை எப்படிப் பார்த்துக்கொண்டிருப்பது. உலகத்தின் வல்லரசுப் போட்டியில் அசுர குண்டுகள் பெருகி வரும்பொழுது மனித இனம் எப்படிக் கவலையற்று இருப்பது. இன்னெரு யுத்தம் ஏற்பட்டு அணுகுண்டுகளும், ஹைட்ரஜன் குண்டுகளும் வீசப்படுமானல் உலகத்திலே பாதுகாப்பான இடம் எது? மூளும் யுத்தங்களெல்லாம் உலக யுத்தமாகப் பற்றும்பொழுது ஜனத்தொகையே அதில் ஈடுபடுவதானல் பயங்கரத்திலிருந்து தப்பும் வழி எங்கே? மடிந்து சாம்பலாவதைத் தவிர வேறு வழியில்லை.

அமெரிக்கா பசிபிக் கடலிலே அணுகுண்டுப் பரீட்சை நடத்திக் கொண்டிருக்கிறது. ரஷியாவும் ஆர்க்டிக் பிரதேசத்தில் நடத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிருர்கள். இரண்டு நாடுகளிலும் ஏற்பட்டுள்ள யுத்தபீதியும் அதனல் விளைந்த அரசியல் பைத்தியமும் இவற்றை அணுகுண்டு பரீட்சையில் இறக்கிவிட்டிருக்கின்றன. அணுகுண்டு பிரச்னை வல்லரசுகளின் தனிப்பட்ட விவகாரமல்ல. அது மனித சமுதாயத்தின் வாழ்வையும், உலகத்தின் எதிர்காலத்தையும் பற்றிய பிரச்னையாகும். யார் எக்கேடு கெட்டுப் போனல் என்ன என்று வாயை மூடிக்கொண்டிருக்க முடியாது.

அணுகுண்டு ஜெனித்துவிட்ட உலகில் இனி யுத்தம் என்று ஏற்படுமானல் அது அணுகுண்டு இல்லாமல் முடியாது. யுத்தங்கள் எலலாம் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு யுத்தங்களாக மாறினல் அது இரு நாடுகளின் வெற்றி, தோல்வி பற்றிய முடிவாயிருக்காது. மனித குலத்தை பூண்டோடழிக்கும் நாச வேலையாகத் தான் மாறும்.

இன்றைய மனிதனின் அவசர முன்னேற்றம் அவதியில் கொண்டு வந்து விட்டிருக்கிறது. யுத்தம் என்று நினைக்கவே அஞ்சுகிருன். சமர் தானம் உண்டேல் பிழைத்தோம்; சண்டையென்ருல் எதுவுமே மிஞ்சாது என்ற குலை நடுக்கத்தாலே 'சாந்தி ஜெபம்' செய்கிருன். இதுதான் இன்னும் நாம் சமாதானத்தை தேடிப்போகும் போக்கு. இதற்காகவாவது யுத்தபீதி வாழட்டும்!

அணுகுண்டை அறிந்த நாடுகள் வெகு நாளைக்கு அப்படியே மூடிக்கொண்டிருக்கமுடியாது. ஆராய்ச்சி மக்கள் உள்ள இடமெல்லாம் பரவி வருவது போட்டி பொருமையிலே கூறுபட்டுக்கிடக்கும் உலக நாடுகள், ஒன்றையொன்று விழுங்க அணுகுண்டையும் அதைப்போன்ற அப்பன் குண்டுகளையும் தயாரிக்கத்தான் செய்

யும். ஆகவே இந்த நிலையிலே அணுகுண்டு ரகசியம் இராது. ஜனாதிபதி ஐஸன்ஹவர் ஐக்கிய நாடுகள் சபையிலே பேசும் பொழுது அணுசக்திக்கான மூலப்பொருள்களையும், ஆராய்ச்சியையும் உலகப் பொது ஸ்தாபனத்தின் கீழ் கொண்டுவந்து மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்படுத்துவதுதான் உலகம் உய்வதற்கு ஒரே வழி என்று குறிப்பிட்டார். அப்படி நடப்பதற்கு அமெரிக்கா எந்த விதத்தில் உதவும் என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

யுத்த பீதியும், சந்தேகமும், போட்டியும் சூழ்ந்துள்ள வேளையில் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுபோன்ற சர்வ நாசக்குண்டுகள் மனித சமுதாயத்தையே பீதியடையச் செய்திருக்கின்றன. அறிஞர்கள் சிந்திக்கிறார்கள், விஞ்ஞானிகள் திகைக்கிறார்கள், அரசியல் வாதிகள் பல யோசனைகள் கூறுகிறார்கள். ஆனால் நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் நம்பிக்கை தருவனவாக இல்லை. மூலைக்கொன்றாக போர்த் தீ பற்றுவதும் அணைவதுமாக இருக்கிறது. எந்த இடத்தில் தீ எப்படிப் பற்றுமோ?

அணுகுண்டு யுத்தத்திற்கான ஒத்திகைபோல் அமெரிக்கா தன் போக்கில் அணுகுண்டுப் பரீட்சை நடத்தி வருகிறது. அமெரிக்கர்களைப் பிடித்துள்ள கம்யூனிச பயம் வேறு எந்த நாட்டையும் பிடிக்கவில்லை. அமெரிக்காவினுடைய அரசியல் கொள்கையோ, அணுகுண்டு விவகாரமோ எல்லாம் கம்யூனிச பயத்தை அடிப்படையாகக்கொண்டே உருவாகின்றன. ரஷியாவும் சும்மாயில்லை. தன்னைச்சேர்ந்த குட்டி நாடுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து கட்சி கட்டிவருகிறது. இந்த நிலைமையில் உலக அரசியலில் கருத்தோட்டம் செலுத்தும்பொழுது உலகத்தின் விதியைப் பற்றிய கவலை ஏற்படாமல் இல்லை. இந்தக் கவலையால்தான் ராஜாஜி போன்றவர்கள் அணுகுண்டு பரீட்சையைக் கண்டிக்கிறார்கள். கண், காது தெரியாமல் ஓடிக்கொண்டிருக்கும் மனித சமுதாயத்தை சிந்தனைக்கு விழிக்கச் செய்யப் பிரயத்தனப்படுகிறார்கள்.

நம்மிடையே அணுகுண்டு ரகசியம் வேண்டாம். அந்தக் குண்டை மடியில் கட்டிக்கொண்டு நெஞ்சிலே திகிலையும் கொட்டிக் கொள்ளவேண்டாம். அணுகுண்டு என்பது நாசத்தின் குழந்தை. அந்தக் கர்ப்பத்தை மனித குலம் தாங்கவேண்டியதில்லை. அதற்காக நெஞ்சு வீங்கவேண்டியதும் இல்லை.

நாச குண்டுகள் ஒரு நாட்டின் பலமாக இருக்க முடியாது. அது கோழைகளின் ஆயுதம். இந்த உண்மையை இன்றைய வல்லரசுகள் உணர்ந்திருந்தால் அரசியல் உலகம் இவ்வளவு சீர்கேடு அடைந்திருக்காது.

—உதயன்.

GANZON BROS.

DRESS SPECIALISTS

3. Thope Street

TRIPLICANE, MADRAS - 5

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters

★

In the hands of the Master - Tailors and Cutters of GANZON, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES

FIRST - CLASS CLOTHES

MADE OF SUPERIOR B. & C.

MATERIALS

Prices Moderate

மாலா

கலை, இலக்கிய மாதப் பத்திரிகை.

விலை 6 அணா

பிரதி மாதம் முதல் வாரம் வெளிவருகிறது

சிறந்த கதைகளும், கட்டுரைகளும்,
சினிமா செய்திகளும், படங்களும் வெளிவருகின்றன

விவரங்களுக்கு :—

மாலா

சதர்ன் அவின்யூ

ஆள்வார்பேட்டை, மதரூஸ்-18

பெற்ற பாசம்

"நரேன்" என்று கூப்பிட்டுக்கொண்டே ரகு தன் வீட்டிற்குள் நுழைந்தான். "பார். உனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கேனென்று!"

அவனுடைய மனைவி நளினி வாசல் பக்கம் ஓடி வந்து, "உஸ்!" என்று கூறி கைவிரலைக் காட்டிக் கொண்டே, ஏதோ ஒரு அபாயக் குறியைத் தெரிவிப்பதுபோல் நின்ருள்.

"என்ன விசேஷம்! குழந்தை எங்கே?" என்று கேட்டான் ரகு.

"குழந்தை தூங்குகிருன்".

"தூங்குகிருனு? இவ்வளவு சீக்கிரமாகவா?" என்று கேட்டுக் கொண்டே நரேனுக்கு வாங்கி வந்த பொம்மையை மேஜைமீது வைத்தான்.

தன் பூட்ஸ்களைக்கூடக் கழற்றிவைக்காமல் குழந்தை படுத்திருக்கும் அறைக்குள் பிரவேசிக்கப்போனுன்,

"இதோ நில்லுங்கோ! அவசரப்பட்டு உள்ளேபோய் குழந்தையை எழுப்பிவிட வேண்டாம்!" என்று கூறிக் கொண்டே நளினி ரகுவின் கைகளைப் பிடித்துக்கொண்டாள். "அவனைத் தூங்கப்படுத்துவது பிரம்ம பிரயத்தனமாகிவிட்டது" என்று மறுபடியும நளினி கூறினுள்.

அவளது கைகளை விலக்கிவிட்டு ரகு மெதுவாக அடிமேல் அடி வைத்து குழந்தை இருந்த அறைக்குச் சென்ருன்.

குழந்தை நரேன் மெத்தை மீது நன்ருக தூங்கிக்கொண்டிருந்தான். அழகும் களங்கமின்மையும் ஒருங்கே பிணைக்கப்பட்டு அவன் முகத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ரகு குழந்தை மீது இருக்கும் பாசத்தினுல் அவன் அருகே விரைந்து சென்று கீழே குனிந்து அவனது தாடையில் ஒரு முத்தமிட்டான்.

குழந்தையின தூக்கம் சிறிது கலைக்கப்பட்டது. "அம்மா! அம்மா!" என்று முனகிக்கொண்டே மறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

"நளினி!" என்று ரகு தூங்கும் குழந்தையை மறந்துவிட்டு உரக்கக் கூப்பிட்டான். நல்ல வேளையாக குழந்தை எழுந்திருக்கவில்லை.

"தயவு செய்து குழந்தையை எழுப்பிவிடாதீர்கள். நான் தான் அவனைத் தூங்கப்படுத்துவதே பெரும்பாடாகப் போய்விட்டது!" என்று கோபங் கலந்த சுரத்துடன் பேசினாள்.

"என்ன நடந்தது? ஏன் குழந்தை அழுதுகொண்டு இருந்தான்? எதற்காக அழுதான்?"

"குழந்தைகள் என்றால் அழாமல் இருந்துவிடுங்களா?" என்றாள் நளினி சுருக்கமாக.

"அப்படியா?" ரகுவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. பல மாதங்களாக ரகுவுக்கு இம்மாதிரி கோபம் வருகிறதென்று தன்னுடைய நாள்பட்ட பழக்கத்தினால் உணர்ந்திருக்கிறாள். அதுவும் கடுமையாக வேலை ஆபீசில் செய்துவிட்டு வீட்டுக்கு வந்ததும், இம்மாதிரி விஷயம் ஏதாவது வீட்டில் இருந்தால் ரகுவுக்கு கோபம் வருவது இயற்கைதானே. அதன் தன்னுடைய சரியான நிலைக்கு, சூடாக ஒரு கப் காப்பி குடித்த பிறகுதான் வருவது வழக்கம்.

நளினி உடனே சமையல் அறையை அடைந்து ஒரு கப் காபி கொண்டு வந்தாள். ரகு தன் அறையில் அதுவரையிலும் தன்னுடைய உடுப்புக்களை களையவில்லை. ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டே தெருவை நோக்கிக் கொண்டிருந்தான். சிறு தூரல் வெளியே போட்டுக் கொண்டிருந்தது. இருளும் மழையுடன் சேர ஆரம்பித்துவிட்டது. வீதியோ 'விரிச்சோ' வென்று இருந்தது.

நளினி ரகுவின் நிலையைக் கவனித்தாள்.

"உங்களுக்கு காப்பி கொண்டு வந்திருக்கிறேன்" என்று மிருதுவாக கூறினாள்.

அவளைத் திரும்பிப் பார்த்து, "என்னவோ என் மனம் இன்று நிம்மதியாக இல்லை. என்ன காரணத்தாலோ அதிசயமாக என் உடம்பு அதிக ஓய்ச்சலாக இருக்கிறது என்றான் ரகு.

அவள் கையிலிருந்து கோப்பையை வாங்கி காப்பி அருந்தும் பொழுது குழந்தை இருந்த அறையிலிருந்து "அம்மா! அம்மா!" என்று சப்தம் கேட்டது.

ரகு மடமட வென்று இரண்டு வாயாக காப்பியை அருந்திவிட்டு நரேன் இருந்த அறைக்கு வந்தான்.

"இன்று சாயங்காலம் முழுவதும் நரேன் அழுதுகொண்டே இருந்தான்" என்றாள் நளினி.

"அவன் அப்படி அழும்படியாக நீ ஒன்றும் செய்யவில்லையே!"

நளினி ரகுவைக் கண் கலங்கப் பார்த்தாள்.

"சொந்தத் தாயார்கூட ஒருகுழந்தையை அவ்வளவு அன்பாகவும், ஜாக்கிரதையாகவும், என்னைப் போல் கவனிக்கமாட்டாள்! நரேன் என்றைக்கும் என் கண்மணிதான்" என்றாள். தன்னை மீறி பொங்கி வரும் கண்ணீரை அடக்க முயன்றாள்.

"நான் வருந்துகிறேன். உன் மனம் புண்படும்படி பேசி விட்டேன். அதையெல்லாம் மனத்தில் வைக்காதே!" என்ருன் ரகு. கைக்குட்டையால் முகத்தில் வரும் வேர்வையைத் துடைத்துக் கொண்டே, "என்னவோ என் மனம் சங்கடப்படுகின்றது. அதை விவரிக்க முடியவில்லை" என்ருன் ரகு.

"ஏதாவது ஆபீசில் தகராரு?" என்று குறுக்கிட்டாள் நளினி.

"அதெல்லாம் ஒன்றுமில்லை! ஆனல் என் மனச்சங்கடம் விவரிக்க இயலாதது!"

சிறிது நேரம் கழித்து, ஒரு புது உணர்ச்சியோடு ரகு எழுந்து நின்ருன். "சுத்த முட்டாள்தனம். என்னை நானே வதைத்துக்கொண்டிருக்கின்றேன். என்ன அறிவீனம்!"

தன்னுடைய கோட்டைக் கழற்றி நளினியிடம் கொடுத்தான்.

"நளினி, ஏன் நரேன் அழுதுகொண்டிருந்தான் என்பதற்கு நேர்முகமான காரணம் ஏதாவது இருக்கின்றதா?"

நளினி, "அது ஒரு பெரிய கதை. பிறகு கூறுகிறேன்".

"இல்லை இப்பொழுது கூற வேண்டும்".

நளினி அடுப்பங்கரையில் வேலையாக இருந்தாள். நரேன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு கலாட்டா தெருவில் ஏற்பட்டது.

நளினி தெருவில் நடக்கும் சச்சரவிற்கு காரணம் ஏதென்று அறிய தெருவுக்கு வந்தாள். நரேன் நடுத்தெருவில் நின்று கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் கிழிந்த ஆடைகளை அணிந்த ஒரு பிச்சைக்காரி நின்று கொண்டிருந்தாள். அவர்களைச் சூழ்ந்து பல ஜனங்கள கோபத்துடன் நின்றுகொண்டிருந்தனர்.

"குழந்தை திருடி இவள்" என்ருன் அக்கூட்டத்தில் ஒருவன்.

"இல்லை சாதாரண திருடிதான்". மற்ருெரு குரல் இம்மாதிரி கூறிற்று.

பக்கத்து வீட்டுப் பெண் பிள்ளை எங்கிருந்தோ அங்கே பிரசன்னமானுள்,

"நளினி! நீ ஏன் இவ்வளவு அஜாக்கிரதையாய் இருக்கிருய். தெருவில் வரும்படி இனிமேல் உன் குழந்தையை விடாதே!" என்ருள்.

"ஏன்? என்ன நடந்தது?" என்று கேட்டுக்கொண்டே நடுத் தெருவில் போய் நரேன் கையைப் பிடித்துக்கொண்டாள். அவனும் அழுதுகொண்டே அவள் பிடியினின்று விடுவித்துக்கொள்ளப் பார்த்தான். "அம்மா" என்று கூட்டத்தில் ஒருவர் கூறிக் கொண்டு, "இந்தப் பிச்சைக்காரி, நாங்கள் பார்த்திராவிட்டால்,

உங்கள் குழந்தையை தூக்கிக்கொண்டு இந்நேரம் வெகு தூரம் போயிருப்பாள். இவள் குழந்தைகளைக் களவாடும் திருட்டுக் கூட்டத்தில் ஒருத்தி !'' என்றான்.

நளினிக்கு அப்பொழுதுதான் இம்மாதிரி குழந்தைகளைத் தூக்கிப் போகும் கயவர்கள் கூட்டம் ஒன்று வந்து இருக்கிறதென்றும், ரகுவும் சில தினங்களுக்கு முன் தனக்கு உஷார் செய்திருப்பதும் ஞாபகத்திற்கு வந்தன.

உடனே நரேன் அணிந்துகொண்டிருக்கும் ஆபரணங்களைப் பார்த்தாள். காது, கழுத்து, கை, கால்களில் அணிந்திருக்கும் ஆபரணங்கள் சரியாக இருக்கின்றதா என்று கவனித்தாள். பிறகு யாரையும் சட்டை செய்யாது ஆகாயத்தைப பார்த்துக்கொண்டிருக்கும் பிச்சைக்காரியையும் கவனித்தாள்.

''உன்னுடைய குழந்தையை தன் மார்புடன் அணைத்து தாடையில் முத்தமிட்டாள்'' என்றாள் பக்கத்து வீட்டு அம்மாள்.

''குழந்தையை அபகரிப்பதற்கு முதல் வழி இதுதான்'' என்றான் கூட்டத்தில் ஒருவன்;

''அவள் முகத்தில் சந்தோஷக் குறி இருந்தது'' என்றாள் நளினி, அந்தச் சம்பவத்தைக் கூறிக் கொண்டே.

''நான்கூட அப்பிச்சைக்காரியை பல தடவை நம் வீட்டிக்கு எதிராகவும், தெருவிலும் பார்த்திருக்கிறேன், '' என்றான் ரகு.

நளினி சட்டென்று ஏதோ ஒரு சந்தர்ப்பத்தை ஞாபகத்துக்கு கொண்டு வந்தாள். ஒரு வாரத்திற்கு முன்புதான் வீட்டு வாசலில் திடீரென்று நளினி வந்து நின்றாள். அப்பொழுது அப்பிச்சைக்காரி நரேனுக்கு அன்புடன் முத்தம் கொடுப்பதைப் பார்த்தாள்.

இது நினைவுக்கு வந்த பிறகுதான் கூட்டத்தினர் கூறும் வார்த்தையை மெய்யென நம்புவது சரியென்று தோற்றிற்று.''

''அவள் குழந்தைகளைத் திருடிச் செல்லும் கூட்டத்தினர் போல் காண்கிறாளா ?'' என்று ரகு கேட்டான்.

''நான் எப்படிக் கூற முடியும்? கூட்டம் ஒருமிக்க கூறி விட்டது.''

''கூட்டம் நாசமாக போகட்டும்! நீ என்ன நினைக்கிறாய் ?''

''நிஜமாக அவள் குழந்தை திருடியாக இருக்கமாட்டாள். அவள் நரேனிடம் அவ்வளவு அன்பாக, பிரியமாக நடந்து கொண்டாள்; சொந்த தாயார் மாதிரி.''

''என்ன ! சொந்த தாயார் மாதிரியாகவா ?''

''ஆமாம், அதில் சிறிதும் பிசகில்லை, நான் நரேன் கையைப் பிடித்து அழைக்கும்பொழுது, நரேனை அவள் அன்பொழுக பல முத்தங்கள் இட்டாள். ''தாயே'' என்று என்னை அழைத்து ''குழந்தையைப் பார்ப்பதற்கு வந்தேன். அவ்வளவுதான். அவனைப் பார்த்தாய் விட்டது. மன்னிக்க வேண்டும் தாயே'' என்று கூறிச் சென்றாள்.

ரகுவிற்கு மனம் கலங்கிவிட்டது.

"ஆமாம். அவள் போகும்பொழுது அடிக்கடி, "என் மனம் குளிர்ந்தது. நான் குழந்தையைப் பார்த்தேன்" என்று கூறிக் கொண்டே போனாளாம்.

ரகு குடையை எடுத்துக்கொண்டே, "ஐயோ பாவம்! அவள் அப்படியா கூறிக்கொண்டு சென்றாள். நீ முட்டாள்! அந்தக் கூட்டம் அவளை ஏதாவது அடித்து—செய்வது முன்பு அவளைக் காப்பாற்ற வழி தேடவில்லையா?"

தெருவுக்குப் போய் ரகு திரும்பி வந்தான்.

"எந்த வழியாகப் போனாள்?" என்றான்

'வலது கை பக்கம் சென்றாள்' என்று மெதுவாகக் கூறினாள் நளினி. "அவளைப் போலீஸ் விடுதிக்கு கூட்டத்தினர் அழைத்துச் சென்று இருப்பார்கள்.

ரகு ஓட்டமாக ஓடினான். மனத்தில் என்னென்னவோ சந்தேகங்கள் எழும்பின. எதிரில் வரும் ஒரு வழிப்போக்கன் மீது ரகு மோதிக் கொண்டான்.

அவ்வழிப்போக்கன் ரகுவைப் பார்த்து, "நீ ஒரு பைத்தியக்காரன்! அங்கே ஒரு பைத்தியக்காரக் கூட்டம்" என்றான்.

"எங்கே அந்தக் கூட்டம?" என்று கோபமாக கேட்டான் ரகு.

"போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகில்தான்."

வெகு வேகமாக ரகு ஓடினான். வழிப்போக்கன் அவனைப் பைத்தியமென்றே மதித்துவிட்டான்.

நாயுடு தெரு, ஜமேதார் தெரு, பாளையக்காரர் தெருவு—எல்லாம் ஒரு நொடியில் தாண்டிவிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகில் வந்து சேர்ந்தான். கூட்டத்தின் நடுவில் புகுந்தான்.

"இவள் ஒரு பெரிய குழந்தை திருடியாம்" என்று ரகு பக்கத்திலிருபபவன் கூறினான்.

"உளறாதே! அநியாயமாக எல்லோரும் சேர்ந்து குற்றமற்ற ஒரு பிராணனை தீர்த்துவிட்டீர்கள்!"

தரையில் அவள் படுத்திருந்தாள். பாதி உயிர் போய்விட்டது; ரகு தரையில் உட்கார்ந்து அவள் முகத்தை கூர்ந்து நோக்கினான்.

கண்களின் நீர் அவனது கண்களை மறைத்துக்கொண்டிருந்தாலும் ரகு அவளை அடையாளம் கண்டு பிடித்துவிட்டான். "சந்தேகமே இல்லை; அவளேதான்!"

சற்று நேரம் கூட்டத்தில் நிலவிய நிசப்தம் இப்பொழுது கலைய ஆரம்பித்துவிட்டது.

"ஜமேதார் தெருவில் ஒரு குழந்தையைக் கடத்தப் பார்த்தாளாம். அது பலிக்காமல் போய்விட்டதாம்" என்றான் கூட்டத்தில் ஒருவன்.

"முட்டாள்களே! ஒரு ஜீவனைக் கொன்றுவிட்டீர்கள்!"

"இல்லை, இல்லை!" என்று பலர் கூறினர்.

"பேசாதீர்கள்—முட்டாள்கள்—அடிமுட்டாள்கள்."

கீழே படுத்திருந்தவளின் தேகம் சற்று அசைந்தது. ஒருவித மான சோக சப்தத்துடன், அவள் தன் கையை கீழே பட்டென்று தொங்கப் போட்டாள். அவள் ஆவியும் பிரிந்தது.

"ஆகா! என்ன அநியாயச் சாவு" என்றான் ரகு. அவன் முழங்காலை மண்டியிட்டு, மரியாதையாக அவளது கைகளைத் தொட்டு, "தாயே! உன் ஆத்மா சாந்தி அடைய நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்."

கூட்டத்தில் இருக்கும் அனைவர்களும் இச்சம்பவத்தைக் கண்டு ஆச்சர்யமடைந்தனர். அப்பொழுது அவ்விடத்தில் ஒரு போலீஸ்காரன் வந்தான்:

"இவளது தகனத்துக்கு ஏற்பாடு நான் செய்யட்டுமா?" என்றான்.

"இல்லை. சர்க்கார் அப் புனித காரியத்தை, சில மணி நேர விசாரணைக்குப் பிறகு, நடத்திவிடும்" என்றான் அப்போலீஸ்காரன்.

ரகு வீடு திரும்பியபொழுது, அவன் முகத்தில் சாந்தி நிலவியிருப்பதை நளினி அறிந்து கொண்டாள். ஆனால் முகத்தில் வருத்தக் குறி சிறிதளவு தென்பட்டது.

"அந்த ஸ்திரீ யார்?" என்று கேட்டாள் நளினி.

"ஆமாம். ஆமாம். அந்த ஸ்திரீ தான் நம் நரேனின் தாயார்!"

"நீங்கள் முன்னடியே கூறியிருக்கப்படாதா?" என்றாள் நளினி.

வாஸ்தவம்: நான் வருந்துகிறேன். முன்னடியே கூறுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை."

"நான்கு வருடங்களுக்கு முன் வந்த பஞ்சம் ஞாபகமிருக்கின்றதா? அப்பொழுது அந்த ஸ்திரீயைப் பார்த்தேன். யாரோ ஒரு ஏழ்மைப்பட்ட திக்கற்ற ஸ்திரீ போல் இருந்தது. ஆபீசில் இருந்து வீட்டிற்கு வரும்பொழுது, வீட்டு வாசலில் என்னை மடக்கி, அழகிய சிரித்த முகத்துடன் இருந்த இந்த நரேந்திரனை என்னிடம் கொடுத்தாள்.

"நான் சந்தோஷத்துடன், ஒரு குழந்தையை வளர்க்கும் பொறுப்புக்களை எள்ளளவும் மனத்தில் நினைக்காமல், ஏற்றுக் கொண்டேன். 'நான் இந்த குழந்தையை விற்கவில்லை—நான் நல்ல நிலைமையில் இருக்கும்பொழுது, குழந்தையை மீட்டுக் கொண்டு போகிறேன்,' என்றாள்.

பாவம். அனாதையாக இறந்தாள்" என்று கண்ணீர் விட்டுக் கொண்டே நளினி கூறினாள்.

"இந்த வாரம் அவள் வந்தாள்! குழந்தையை என்னிட மிருந்து எடுத்துக்கொண்டு போக வரவில்லை. ஒரு முறை பார்க்கத் தான் வந்தாள்" என்றான் ரகு.

—எம். கே. சீனுவாசன்

★ எட்டாயிரத்திற்கும் கிட்டாது! ★

மாப்பிள்ளைகளைத் தேடுபவர்கள் சட்ட திட்டங்களுக்குப் பயந்து நடக்கும் ஒழுங்கான பிரஜைகள் மட்டுமல்ல. சட்டத்திற்கு அடங்காமலும் ஒழுங்கில்லாமலிருப்பவர்களும்கூட மாப்பிள்ளைகளைத் தேடுகிறார்கள்!

இந்த ரகத்தைச் சேர்ந்தவன்தான் பந்தல்கண்டைச் சேர்ந்த தேவி சிங் என்ற கொள்ளைக்காரன். ஊரெங்கிலும் கலியாணம் நடக்கின்றன. சாரதா சட்டத்தையு மீறி சிறு குழந்தைகளுக்குக்கூட விவாகம் நடந்தேறுகின்றன. ஆனால் தேவி சிங்கின் மகளை மணந்துகொள்ள மாப்பிள்ளை கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது.

தன் இனத்தைச் சேர்ந்த வாலிபர் எவராவது தன் பெண்ணை மணந்துகொள்ளத் தயாரானால் எட்டாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுக்கச் சித்தமாக இருக்கிறார் தேவிசிங்.

மாமனாரின் வியாபாரத்திலும் அதனால் ஏற்படும் லாபத்திலும் மாப்பிள்ளைக்குப் பங்கு உண்டென்பதில் சந்தேகமில்லையல்லவா?

இவ்வளவு சலுகைகளிருந்தும் தேவிசிங்கின் பெண்ணை மணந்துகொள்ள எவரும் முன்வராதது காலத்தின் கோலம் தானே?

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்
அசோகா உற்சாகம் தரும்